


# The Bible Standard

(Extra - Edition)

"உமது வெளிச்சத்தையும் உமது சத்தியத்தையும் அனுப்பியருளும் அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

**"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"**
**Isaiah 62 : 10**
**Translated from BS 371**

**பொருளடக்கம்**


## ஐசுவரியவான் லாசரு

என்னும் உவமை............ 2


**BS 371**

**Tamil Version - 5**

# நரகத்தில் ஐசுவரியவான் - அவன் எப்பொழுதாவது திரும்ப வருவானா?

## THE RICH MAN IN HELL - WILL HE EVER COME BACK?

**லூக். 16 : 19-31**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, லூக். 16-ம் அதிகாரத்தில் உக்கிராணக்காரன் உவமையைச் சொன்ன பின்பு 16 : 19-லிருந்து ஐசுவரியவான் லாசருவின் உவமையைக் கூறுகிறார். மத். 13 : 13, 34-ல் கூறப்பட்டிருக்கிறபடி இதுவும் உவமை என்பது நிச்சயம். ஆபிரகாம், மோசே தீர்க்கத்தரிசிகள் உயிரோடிருப்பதாக உவமையில் கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் அக்காலத்தில் உயிரோடிருந்தார்களா? இல்லையே! கர்த்தராகிய இயேசு தானே மரித்தோரில் முதற்பலன் - முதன் முதலாவது உயிர்த்தெழுப்பப்பட்டது. நித்திய நரக வேதனை உபதேசம் 1 தீமோ. 4 : 1-ல் கூறப்பட்டிருக்கிற பிசாசுகளின் உபதேசம் ஆகும். இஸ்ரவேலரின் தேவதயவின் காலமான யூதயுகம் முடிந்து, புறஜாதிகளின் தேவ தயவின் காலமான சுவிசேஷயுகம் ஆரம்பிக்கும் சமயத்தில் கூறப்பட்ட இவ்வுவமையை பற்றிய இக்கட்டுரை பாஸ்டர் ஆர்.ஜி. ஜாலி, 1967 பெப்ரவரி மாதத்து பைபிள் ஸ்டாண்டர்ட் பத்திரிக்கையில் வெளியிட்டதின் மொழி பெயர்ப்பு ஆகும். நரகத்தில் ஐசுவரியவான் - அவன் எப்பொழுதாவது திரும்ப வருவானா?

நரகம் அல்லது பாதாளம் என்ற விஷயத்தைப் பற்றி அநேகர் தப்பான எண்ணமுடையவர்களாக இருக்கின்றனர். நரகம் அல்லது பாதாளம் என்பது பாவிகளான கோடானுகோடிப்பேர் நித்யா நித்திய காலமாக எரிகிற நெருப்பின் அகோர வேதனையில் வதைக்கப்படுகிற அதிபயங்கரமான ஓர் இடம் என்ற இருண்ட யுகங்களின் தப்பான போதனையைச் சிலர் இன்னும் நம்பிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் வேதாக மத்தைக் கருத்தாய் ஆராய்ந்து படிக்கிறவர்கள் அனைவரும் வேதாகமத்தில் கூறப்பட்டிருக்கும் "நரகமானது" மேற் கூறியதற்கு முற்றிலும் வேறானது என்று காண்கிறார்கள். ஆங்கில வேதாகமத்தில் 41 தடவை நரகம், 32 தடவை பிரேதக்குழி, 3 தடவை குழி என்றும், தமிழ் வேதாகமத்தில் 73 தடவை பாதாளம், 3 தடவை நரகம் என்றும், தமிழ் வேதாகம புது மொழி பெயர்ப்பிலோ 75 தடவை பாதாளம், ஒரு தடவை மரணம் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கும் "ஷியோல்" (sheol) என்ற ஒரே எபிரேய வார்த்தையும், புதிய ஏற்பாட்டில் அதற்குச் சமமான "ஹேட்ஸ்" (Hades) என்ற கிரேக்க பதமும் இரண்டு நரகங் களைக் குறிக்கின்றன. முதலாம் நரகம் நல்லவர்களும் மரணத்தில் அடைகிற உயிரற்ற, அறிவற்ற, உணர்வற்ற மறதியின் நிலைமையான ஆதாமின் பாவத்தால் வந்த மரண நிலைமையைக் குறிக்கிறது. [ஆதி 37 : 35; 42 : 38; யோபு 14 : 13; 17 : 13; சங். 16 : 10. (இவ்வசனத்தை அப். 2 : 27-31 உடன் ஒத்துப் பார்க்கவும்). சங். 86 : 13; 16 : 10; யோபு 17 : 13].

கெட்டவர்களும் மரணத்தில் அங்குதான் போவதாகப் பின்வரும் வசனங்கள் தெரிவிக்கின்றன. (1 ராஜா. 2 : 6, 9; சங். 55 : 15; நீதி. 7 : 27; 9 : 18). இவ்வசனத்தை மத். 11 : 23-னோடு ஒத்துப் பார்க்கவும். இந்த முதல் நரகத்தி லிருந்து உயிர்த்தெழுதல் மூலம் மரித்தோர் மீண்டும் வருவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. இரண்டாம் நரகம் சீர்திருத்தப்படக் கூடாத பொல்லாதவர்களுக்குரிய முற்றிலும் பரிபூரண நித்திய அழிவின் நிலைமையைக் குறிக்கிறது. (சங். 37 : 38; 145 : 20; ஏசா. 1 : 28; 43 : 17; ஓபதி. 16). இவ்விரு நிலைமைகளையும் காட்டுவதாய் "ஹேட்ஸ், கெஹன்னா" (Hades, Gehenna) என்ற பதங்கள் முறையே புதிய ஏற்பாட்டில் உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. பாவத்தின் தண்டனை "சதா காலமும் வதைக்கப்படுகிற நித்திய ஜீவன்" என்ற உபதேசத்தை வேதாகமம் போதிக்கவில்லை. அதற்கு மாறாக "பாவத்தின் சம்பளம் மரணம்" அதாவது அழிவு என்றுதான் கூறுகிறது. (ரோம. 6 : 23; மத். 10 : 28) நரகத்தைப் பற்றிய ஒவ்வொரு வேத வாக்கியத்தையும் சோதித்தறிய "வேதாகமத்தின் நரகம்" என்ற சிறு புத்தகத்தை "The Hell of the Bible" அவசியம் வாசிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பரிசுத்த வேதாகமம் இரண்டு நரகங்களைப் பற்றி கூறுகிறது. இவ்விரு நரகங்களும் அறிவற்ற, மறதியின் அல்லது அழிவின் நிலைமையே தவிர அவை இடங்களைக் குறிப்பவை அல்ல என்று வேத வசனம் போதிக்கையில், அதில் கூறப்பட்டிருக்கிற உவமைகளையும், உருவக அணிச்சொற் களையும் சொல்லர்த்தமாகச் சிலர் எடுத்துக்கொண்டு, இரட்சிக்கப்படாத நிலைமையிலே மரித்துப்போன கோடானு கோடிப் பேரையும், மனிதர் இரட்சிப்படையும்படிக்கு அறிய வேண்டிய ஒரே நாமத்தைக் (இயேசு) கேள்விப்படாதவர்களையும், தேவன் நித்யா நித்திய காலமாக எரிகிற அக்கினியிலே தள்ளி வதைப்பாரென்று தோன்றும்படியாக இவ்வசனங்களை உபயோகிக்கின்றனர். (அப். 4 : 12; யோவா. 14 : 6)

இவ்விதமாகக் கூறப்பட்ட உவமைகளில் ஒன்றான "ஐசுவரியவானும் லாசருவும்" என்ற உவமையை நாம் இங்கே ஆராய்வோம். இது ஒரு உவமைதான் என்று வேத புத்தகமே கூறுகிறது. திரளான ஜனங்களுடன் உவமைகளினாலே இயேசு பேசினார். உவமைகள் அல்லாமல் அவர்களுடனே அவர் பேசினதே இல்லை. (மத். 13 : 34, 35; லூக். 8 : 10) திரளான ஜனங்களின் தலைவர்களான பரிசேயருக்கு இந்த உவமை சொல்லப்பட்டது. நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மூலம் இவர்கள் மனுஷருக்கு முன்பாகத் தங்களை நீதிமான்களாகக் காண்பிக்கப் பிரயாசப்பட்டனர். யூத யுகமான நியாயப்பிரமாண காலம் அப்பொழுது முடிவடைந்து கொண்டிருந்தது. சுவிசேஷ யுகத்திற்கு முந்திய யூத யுகத்தின் கடைசித் தீர்க்கத் தரிசியாயிருந்தவன் யோவான் ஸ்நானன். (லூக். 16 : 14-18) சுவிசேஷ யுக ஆரம்பத்தில் பரலோக இராஜ்ய அழைப்பாகிய தேவனுடைய விசேஷித்த கிருபையில் புறஜாதிகள் உடனடியாய் ஏற்றுக் கொள்ளப்படுவதையும், யூத யுக முடிவில் தேவனுடைய விசேஷித்த கிருபையிலிருந்து யூத ஜாதி தள்ளப்படுவதையும் இந்த உவமையின் மூலம் அப்பொழுது இயேசு விளக்கினார். இந்த உவமையைச் சொல்லர்த்தமாகப் போதிக்கிறவர்கள் பின்வருமாறு கூறுகின்றனர்.

**COURTESY BY :**

THE BIBLE STANDARD -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, Ralph M. Herzig. Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

ஐசுவரியவான் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் சம்பிரமமாய் வாழ்ந்தான். லாசரு என்ற ஒரு பிச்சைக்காரன் மிகவும் பசியுள்ளவனாக, அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேசையிலிருந்து விழும் துணிக்கைகளினாலே தனது பசியைப் போக்க விரும்பினான். லாசருமரித்து பரலோகத்திலிருப்பதாக உத்தேசிக்கப்படுகிற ஆபிரகாமின் மடிக்குத் தூதர்களால் கொண்டு போகப்பட்டான். பின்பு அந்த ஐசுவரியவான் மரித்து ஹேட்ஸ்க்கு (Hades) – நரகத்திற்குப் போனான். அங்கே அவன் வேதனைப்படுகையில், தூரத்தில் ஆபிரகாமின் மடியில் லாசருவைக் கண்டு ஆபிரகாமை கூப்பிட்டு, தன்மேல் இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து தன் நாவைக் குளிரப்பண்ணி, தன் வேதனையைக் குறைக்க அவனைத் தன்னிடம் அனுப்பும்படி வேண்டிக் கொண்டான். "பூலோக வாழ்வில், லாசரு துன்பப்படும்பொழுது நீ சம்பிரமமாய் வாழ்ந்தாய். உனக்கும், லாசருவுக்கும் நடுவே ஒரு பெரும் பிளப்பு இருப்பதால், எவரும் அதைக் கடந்து வர முடியாது" என்று ஆபிரகாம் கூறினான். அப்பொழுது அந்த ஐசுவரியவான், தன்னுடைய ஐந்து சகோதரர்களும் வேதனையுள்ள அந்த இடத்திற்கு வராதபடி, லாசருவை அனுப்பி, அவர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். "அவர்களுக்கு மோசேயும், தீர்க்கதரிசிகளும் உண்டு; அவர்களுக்கு அவர்கள் செவிகொடுக்கட்டும்" என்று சொல்லி இந்த விண்ணபத்தையும் ஆபிரகாம் தள்ளிவிட்டான். "மரித்தோரிலிருந்து ஒருவன் அங்கு போனால் அவர்கள் மனந்திரும்புவார்கள்" என்று ஐசுவரியவான் மீண்டும் கெஞ்சினான். அதற்கும் ஆபிரகாம் "மோசேக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் செவிகொடுக்காவிட்டால், மரித்தோரி லிருந்து ஒருவன் எழுந்து போனாலும் நம்பமாட்டார்கள்" என்று சொன்னான்.

இந்த உவமையின் சொல்லர்த்த விளக்கம், வேத உபதேசத்திற்கும், நியாய தோரணைக்கும், யதார்த்தத்திற்கும் முரணானது என்று நிரூபிக்க குறைந்தது 12 காரணங்களை காட்டலாம்.

**(1)** அது தேவனுடைய குணத்திற்கு எதிரானது. பின்வரும் வசனம் அதை விளக்குகிறது. (உ–ம்) எரே. 9 : 24. "மேன்மை பாராட்டுகிறவன், பூமியிலே கிருபையையும் (அன்பு) நியாயத்தையும் (ஞானம்) நீதியையும் செய்கிற (வல்லமையின் கிரியை) கர்த்தர் (யேகோவா) நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மைபாராட்டக் கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின் மேல் (வல்லமை, அன்பு, ஞானம், நீதி) பிரியமாய் இருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; மற்ற வேத வாக்கியங்களும் தேவனுடைய மாபெரும் குண இலட்சணங்களைக் காட்டுகின்றன. (உ–ம்) எபே. 1 : 5–14; வெளி. 4 : 6, 7. கழுகு – ஞானம்; சிங்கம் – வல்லமை; காளை – நீதி; மனுஷ முகம் – அன்பு. யோபு 37 : 23; உபா. 32 : 4 முதலியன. **(அ)** சொல்லர்த்தமான விளக்கம் தேவனுடைய ஞானத்திற்கு விரோதமானது. பிரயோஜனமான நற்பலனைப் பெறுவதற்கே ஞானம் பல திட்டங்களை வகுக்கின்றது. ஐசுவரியவானை வேதனையுள்ள இடத்திலேயே போட்டு நித்தியகாலமாக வதைப்பதினாலே எந்தவிதப் பிரயோஜனமும் எவருக்கும் உண்டாகாது என்பது நிச்சயம்.

**(ஆ)** உவமையின் சொல்லர்த்தமான விளக்கம் தேவ நீதிக்கு விரோதமானது. ஏனென்றால், பாவத்திற்காக மனுஷனுடைய ஜீவன் பறிக்கப்பட வேண்டும் என நீதி வற்புறுத்துகிறது. (ஆதி. 2 : 17). ஏனென்றால், பாவத்தின் சம்பளம் மரணம் (ரோம. 6 : 23). "துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்"என்று சங். 145 : 20 தேவனைப் பற்றிக் கூறுகிறது. ஆகையால், துன்மார்க்கரை நித்திய காலமாக உயிரோடே வைத்து வதைப்பது தன்னுடைய நீதியினின்று அவர் புரளுவதாகும். **(இ)** மேலும் அது தேவனுடைய அன்பை நிராகரிக்கிறது – தள்ளிப் போடுகிறது. தமது சிருஷ்டிகளான இவர்களின் நிவாரணத்திற்கு எதுவும் செய்யாமல் அவர்களை நித்திய காலமாக அவர் வதைப்பார் என்று தேவனுடைய அன்பைச் சரியாய் உணர்ந்திருக்கிற எவனும் நம்பவே மாட்டான். **(ஈ)** அது, தன்னடக்கம், பொறுமை, என்ற குண அம்சங்களடங்கிய தேவனுடைய வல்லமையை நிராகரிக்கிறது. வேலையை நடப்பிக்கும் ஆற்றலே வல்லமை. இது மனுக்குலம் அனைத்தையும் ஆசீர்வதிக்கும் நோக்கமுள்ள தேவனுடைய ஏற்பாட்டை நடத்துகிறது. (ஆதி. 12 : 1–3) அதாவது இந்த வல்லமையானது, ஞானம், அன்பு, நீதி முதலிய அவருடைய மற்றக் குணங்களுடன் இசைந்து தான் கிரியை செய்யக்கூடும். ஆகையினாலே ஐசுவரியவானை வதைப்பது தேவனுடைய வல்லமைக்கு உகந்த ஓர் கிரியை அல்ல. அதற்கு மாறாக அப்படி வதைப்பது பிசாசின் வல்லமையைக் காண்பிக்கின்றதாகும். ஆதலால், இந்த உவமையின் சொல்லர்த்த விளக்கம் தேவனுடைய பற்பல குண அம்சங்களுக்கு நேர் விரோதமானதாய் இருக்கிறது.

## சொல் அர்த்தம் மீட்கும் பொருள் உபதேசத்திற்கு விரோதமானது

**(2)** இந்த உவமையின் சொல்லர்த்தமான விளக்கம் மீட்கும் பொருள் உபதேசத்திற்கு விரோதமானது. சற்று முன் நாம் காண்பித்திருக்கிறபடி, "பாவத்தின் சம்பளம் மரணம்" – வேதனையுள்ள நித்திய ஜீவன் அல்ல – என்று ஆதி. 2 : 17 தெளிவாகக் கூறுகிறது (ரோம. 6 : 23 ஒத்துப்பார்க்க) ஆதாமின் மீறுதலினாலே, அவனும் அவன் சந்ததியாரெல்லாரும் பாவத்திலும், அபூரணத்திலும் வீழ்ந்துவிட்டனர். ஆகையால், ஆதாமின் சந்ததியாரில் எவனும் எந்த வகையிலும் தன் சகோதரரை மீட்கவோ அல்லது அவர்களுக்கு ஈடாக மீட்கும் பொருளைக் கொடுக்கவோ முடியாது (சங். 49 : 7). அவர்கள் மீட்கப்பட வேண்டுமானால், ஆதாமும் அவன் சந்ததியும் ஏதேனில் இழந்துபோன பரிபூரண ஜீவனுக்கு ஈடாக ஒரு பரிபூரண மானிட ஜீவன் மரணமடைய – நித்திய வேதனையில் வதைக்கப்படுவதை அல்ல – தேவ நீதிக்கு அவசியமாய் இருந்தது. ஆதாமுக்கும், அவன் பாவஞ் செய்யும்பொழுது அவன் இடுப்பில் இருந்த சந்ததிக்கும் பதிலாக, அப்படிப்பட்ட மீட்கும் பொருள் – ஈடான கிரயம். எல்லா மனுஷரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்த, பாவமற்ற பரிபூரண மனுஷனாகிய, கிறிஸ்து இயேசுவால் கொடுக்கப்பட்டது. இதற்கேற்ற சாட்சி ஏற்ற காலங்களில் விளங்குகிறது. ஒவ்வொரு மனுஷனுக்காகவும் அவர் மரணத்தை ருசிப்பார்த்தார். (1 தீமோ. 2 : 4–6; எபி. 2 : 9; மத். 20 : 28; மாற். 10 : 45). "கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக வேத வாக்கியங்களின்படி (பழைய ஏற்பாடு) மரித்தார்" என்பதே, தான் அடைந்ததும், அறிவித்ததுமான சுவிசேஷத்தின் சுருக்கம் என்று, அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரி. 15 : 3–ல் கூறுகிறார்.

மனுக்குலம் அனைத்திற்கும் மீட்கும் பொருளாகும்படி இயேசு மரிப்பார் என்று – நித்திய காலமாக வதைக்கப்படுவார் என்றல்ல – தீர்க்கதரிசனமாக நிரூபிக்கின்ற பற்பல பழைய ஏற்பாட்டு வேத வாக்கியங்களை நாம் ஆராய்வோம். அவருடைய மரணத்தின் மூலம் அதிலும் சிலுவை மரணத்தின் மூலம் அந்த மீட்கும் பொருள் கிரயத்தை அவர் எப்படி சவதரித்துத் தந்தார்

என்பதைத் தீர்க்கதரிசனமான சங். 22 போதுமான விபரங்களுடன் காட்டுகிறது. ஏசா. 53 : 4-12-ம் இதைப் போலவே சாட்சி கொடுத்து, தேவனுடைய நேச குமாரனான அவர் மாம்சமான பின் (யோவா. 1 : 14; 3 : 16, 17), நமது பாவ நிவாரண பலியாக நமது பலவீனங்களைத் தாமே ஏற்றுக் கொண்டார். நமது பாடுகளை ஏற்றுக் கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்கள் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினை அவர் மேல் விழுந்தது (ரோம. 5 : 1). அவருடைய தழும்புகளால் குணமாகி றோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிர மத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.(ஏசா. 53 : 4, 6) "ஜீவனுள்ளோ ருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார்." துன்மார்க்கரோடே அவருடைய பிரேதக் குழியை நியமித்தார்கள். ஆனாலும் அவர் மரித்தபோது ஐசுவரியவான்களோடே இருந்தார். அவருடைய ஆத்துமா (அவருடைய மனுஷீகம்) குற்ற நிவாரண பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார். ஏசா. 53 : 8, 12; தானி. 9 : 26; ஆகிய வேத வாக்கியங்கள் தீர்க்கதரிசனமாக "மேசியா சங்கரிக்கப்படுவார்" என்று முன் அறிவித்தன.

இவ்விதமாகப் பாவத்தின் தண்டனை மரணம் என்று வேதாகமம் தெளிவாய்ப் போதிக்கிறதால், "பாவத்தின் தண்டனை கொடிய வேதனையுள்ள நித்திய ஜீவன்" என்ற சொல்லர்த்தமான இந்த உவமையின் விளக்கம், மீட்கும் பொருளுக்கு எங்கனம் முற்றிலும் விரோதமாயிருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். இது பாவத்தின் தண்டனையாக இருந்தால் நாம் அனைவரும் நித்திய வேதனையில் துன்பப்பட வேண்டியதாய் இருந்திருக்கும். ஏனென்றால் நம்மை விடுதலை செய்ய இயேசு அது போன்ற ஒரு மீட்கும் பொருள் கிரயத்தையோ, கடனையோ செலுத்தவில்லை.

மேலும் இவ்வுவமையின் சொல்லர்த்தத்தின்படி ஐசுவரியவானுக்கோ, லாசருக்கோ, கல்வாரிச் சிலுவையில் உறுதி செய்யப்பட்டுள்ள ஜீவனுக்கான ஓர் பரீட்சைக்கு இடமில்லாது போய்விடும். அந்தப் பரீட்சையின் காலத்தில் பாவிகளான அவர்களுக்காகவும் இயேசு பரிந்து பேசுவார். கல்வாரிக்குப் பின்பு கிடைத்த இயேசுவின் மீட்கும் பொருளின் புண்ணியமானது, சாட்டுதல் செய்யப்பட்டோ, அல்லது உள்ளபடியே பெற்றுக் கொண்டாலோ அன்றி ஒருவரும் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிக்க முடியாது. (அப். 4 : 12; யோவா. 3 : 36; 1 யோவா. 4 : 9; 5 : 12; ரோம. 4 : 25) அல்லது பாவத்திற்காக இயேசு ஏன் மரிக்க வேண்டும்? "தேவனுடைய கிருபையினால் அவர் ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசிபார்த்தார்."(எபி. 2 : 9; 1 தீமோ. 4 : 10; 1 யோவா. 2 : 2). ஆகையால் சொல்லர்த்தமான அந்த ஐசுவரியவானை, கிறிஸ்துவின் மரணத்திற்கு முன்பே, நித்திய வேதனையில் தள்ளுவது என்பது, அவனுக்காகவும் மற்றெல்லாருக்காகவும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட மீட்கும் பொருளை அசட்டை செய்கிறது. (1 தீமோ. 2 : 6).

## நரகம் – ஓர் உணர்வற்ற நிலைமை

**(3)** இந்த உவமையில் செல்லர்த்தமான விளக்கம் நரகத்தைப் பற்றிய வேத உபதேசத்திற்கு விரோதமானது. நாம் ஏற்கனவே காட்டியிருப்பது போல நரகம் – ஷியோல் – ஹேட்ஸ் அல்லது கெஹன்னா (Sheol, Hades, Gehenna) என்ற பதங்கள் மரணத்தில் நாம் அடைகிற உணர்வற்ற நிலைமையைக் குறிக்கிறது. இது ஜீவனுக்கு நேர் விரோதமான நிலைமை. இவ்விரு கருத்துக்களும் உவமையின் சொல்லர்த்தமான விளக்கத்தை மறுக்கின்றன. ஷியோல் அல்லது ஹேட்ஸ் என்ற உணர்வற்ற நிலைமையிலிருந்து மரித்தோர் உயிர்த் தெழும்புவார்கள். ஆனால் கெஹன்னாவிலிருந்து உயிர்த் தெழுந்து வர முடியாது. ஏனென்றால் இது "அக்கினிக்கடல்" என்று உருவகமாய் அழைக்கப்படுகிற, இரண்டாம் மரணத்தின் (ஜீவனுக்கு எதிரானது) பூரண நித்திய அழிவாகிய உணர்வற்ற நிலைமையைக் குறிக்கிறது. (வெளி. 20 : 14, 15; 21 : 8) இரண்டாம் மரணத்தைப் பற்றித் தெரிவிக்கின்ற பின்வரும் வாக்கியங்களையும் மற்ற வேத வாக்கியங்களையும் ஆராய்ந்தறிய தயவு செய்து பைபிள் ஸ்டாண்டர்ட் எண் 199, 200 என்ற பத்திரிக்கைகளைப் படிக்கவும் மத். 25 : 41, 46; மாற். 9 : 44, 46, 48; வெளி. 20 : 10-15; 21 : 8) 1611-ம் வருட ஜேம்ஸ் அரசன் வேதாகமப் பதிப்பில் ஷியோல் அல்லது ஹேட்ஸ் என்ற பதங்களை நரகம் அல்லது பிரேதக்குழி என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள். இவ்வார்த்தைகள் வருகின்ற அந்தப் பக்கங்களின் ஓரங்களில் நரகத்திற்குப் பதிலாகப் பிரேதக்குழி என்றோ அல்லது பிரேதக்குழிக்குப் பதிலாக நரகம் என்றாவது வைத்து வாசிக்கலாம் என்று குறித்திருக்கின்றனர். எனவே, ஷியோல், ஹேட்ஸ், நரகம், பாதாளம், பிரேதக்குழி என்ற பதங்கள் சமமான கருத்துடையவைகளாக மரணத்தின் அறிவற்ற, உணர்வற்ற நிலைமையைக் குறிக்கின்றன என அறிகிறோம். (சங். 49 : 15; 55 : 15; 86 : 13;ஏசா. 14 : 9; யோனா 2 : 2; 1 கொரி. 15 : 55). இவ்வசனங்களை ஆங்கில வேதாகம புத்தகத்திலே வாசித்து, இவற்றைப் பற்றி ஓரங்களில் அச்சிட்டிருக்கும் குறிப்புகளில், "அல்லது நரகம், அல்லது பாதாளம்" எனக் குறித்துள்ளதைக் கவனியுங்கள். மேற்கண்ட ஆறு வசனங்களில் வரும் பதங்களை ஆங்கில வேதாகமத்தில் இருமுறை "பிரேதக் குழி" என்றும் மீதியை "நரகம்" என்றும் மொழிபெயர்த்திருக்க, தமிழ் மொழிபெயர்ப்பிலோ எல்லா இடங்களிலும் "பாதாளம்" என்றே மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

பின்வரும் வேத வாக்கியங்களும் – "மரணம்" என்பது உணர்ச்சியற்ற நிலைமை என்றும் – அது ஜீவனுக்கு எதிரானது என்பதையும் காட்டுகின்றன.

1 சாமு. 2 : 6-ல் "கர்த்தரே கொல்லுகிறவரும்", அவரே "பாதாளத்தில்" இறங்கவும் பண்ணுகிறவர் என்றும் கூறுவதில் இரண்டையும் ஒரே கருத்துள்ளவைகளாகக் காட்டியிருப்பது போல, "உயிர்ப்பிக்கிறவரும்" "ஏறப் பண்ணுகிறவரும்" என்ற பதங்களும், இரட்டை இணை ஒப்புப் பதங்களாகக் காட்டப் பட்டிருக்கின்றன. மரண சமயத்தில் நரகத்தில் (ஷியோலில்) இறங்குகிறவர்கள், உயிர்த்தெழுதலில் அங்கிருந்து வெளியேறு கின்றனர் என்று இந்த இரட்டை இணை ஒப்பு வசனங்கள் காட்டுகின்றன. ஆகையால், அங்கு உபத்திரவமோ உணர்வோ, துன்பமோ அல்லது இன்பமோ கிடையாது. அங்கே இருப்பவர்கள் உண்மையாகவே மரித்திருக்கின்றனர்; கல்லறையின் உணர்வற்ற நிலைமையிலிருந்து அவர்கள் உயிர்த்தெழுதலில் விழித்தெழும்பித் திரும்பவும் கொண்டுவரப்படுமட்டும் அவர்கள் அங்கேயே மரண நிலையில் இருப்பார்கள். (யோவா. 5 : 28, 20 ஒத்துப்பார்க்க).

யோபு 14 : 21-ல் "அவன் பிள்ளைகள் கனமடைந் தாலும் அவன் உணரான். அவர்கள் சிறுமைப்பட்டாலும் அவர்களைக் கவனியான்" என்று கூறியிருக்கிறதின் கருத்தைக் கவனிப்போம். மரித்துப்போன ஒரு தகப்பன் தன் பிள்ளைகளைப் பற்றி யாதொன்றும் அறியான். அவன் முற்றிலும் உணர்வற்ற நிலைமையில் இருக்கிறான். யோவா. 14 : 13; 17 : 13;

வசனங்கள் முறையே இரகசியமாய், மறைந்து இருளிலிருக்கிற ஓர் நிலைமையையே நரகத்திலிருப்பதாக – ஷியோலில் இருப்பதாக கூறுகின்றன. இந்த விவரமான விளக்கம் இன்பமுள்ள அல்லது துன்பமுள்ள, இடத்திற்குப் பொருந்தாது. ஆனால், உணர்வற்ற ஓர் நிலைமைக்குத்தான் பொருந்தும். சங். 6 : 5–ல் மரணத்தில் உம்மை நினைவு கூறுவதில்லை, பாதாளத்தில் (ஷியோலில்) உம்மைத் துதிப்பவன் யார்? என்று சங்கீதக்காரன் கேட்கிறான். தேவனுடைய தாசனாகிய தாவீது மரணத்தில் நித்திய வேதனையுள்ள ஓர் இடத்திற்குப் போகமாட்டான். மேற்படி ஷியோல் ஓர் இன்பமான இடமாய் இருந்து, அவன் அங்கே போவதானால் அவன் தேவனுக்கு நன்றி செலுத்திக் கொண்டிருப்பான். ஆனால், மரண நிலைமையில் (அப். 2 : 29) தேவனை நினைவு கூறக் கூடாமலும், அவருக்கு நன்றி செலுத்தக்கூடாமலும், ஷியோலில் மரண நித்திரையிலிருந்து, உயிர்த்தெழுதலில் எழுப்பப்படும் வரை, தாவீது உணர்வற்ற நிலைமையிலேயே இருக்க வேண்டும்.

சங். 30 : 3–ல் சொல்லப்பட்டிருக்கிறபடி ஷியோலுக்குப் (பாதாளம் என்று இங்கு மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது) போகாமல் காக்கப்படுவது ஜீவனோடிருப்பதாகும். சங். 89 : 48–ம் இதைப் போன்ற கருத்தையே கொடுக்கிறது.

சங். 31 : 17–ல் "துன்மார்க்கர் வெட்கப்பட்டுப் பாதாளத்தில் (ஷியோலில்) மவுனமாய் இருக்கட்டும்" என்று சொல்லியிருக்கிறது. ஷியோல், இன்பமுள்ள ஓர் இடமானால் துன்மார்க்கர் அங்கே இருக்கமாட்டார்கள். அது ஒரு வதைக்கப்படும் இடமானால் அங்கே அவர்கள் மவுனமாய் இருக்கமாட்டார்கள். ஆகையால், ஷியோலிலே உணர்வற்ற நிலைமையில்தான் அவர்கள் இருக்க வேண்டும்.

சங். 115 : 17 "மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" இந்த வசனம் மரணத்திற்குப் பின் வேதனையைக் குறிப்பிடவில்லை. ஏனென்றால், மரணத்திற்குள் போகிறவர்கள் மவுனத்தில் இறங்குகிறதாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால், அவர்கள் நித்திய வேதனையில் புலம்பிக் கொண்டிருக்க முடியாது. இதற்கு மாறாக, இன்பமுள்ள ஒரு பரதீசையும் இது குறிக்க முடியாது. ஏனென்றால், பரதீஸில் இருப்பவர்கள் தேவனைத் துதித்துக் கொண்டிருப்பார்கள். மரித்தவர்கள் துதிக்கமாட்டார்கள். ஆகையால் மரண ஸ்திதியான மவுனத்தில் இறங்குகிறவர்கள் முற்றிலும் உணர்வற்றவர்களாகவே இருக்கிறார்கள்.

சங். 146 : 3, 4 "பிரபுக்களையும் இரட்சிக்கத் திராணியில்லாத மனுப்புத்திரனையும் நம்பாதேயுங்கள். அவனுடைய ஆவி பிரியும்; அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான்; அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்து போம்" நமது நம்பிக்கை தேவன் பேரிலும் கிறிஸ்துவின் பேரிலும் இருக்க வேண்டும்; மனுஷர் மேல் அல்ல. நாம் மனுஷர்மேல் ஏன் நம்பிக்கை வைக்கக்கூடாது என்றால், அவனுடைய ஆவி பிரிந்து – சுவாசம் போய் அவன் மண்ணுக்குத் திரும்பும் அதே நாளிலே அவனுடைய யோசனைகள் அழியும். அவர்கள் யோசனை அற்றுப்போய் உணர்வற்றவர் களாகின்றனர். ஆகையால், அவர்கள் இன்பத்திலோ, துன்பத்திலோ இருக்க முடியாது.

பிர. 9 : 5, 6, 10 "உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்; இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை, அவர்கள் பேர் முதலாய் (பெரும்பான்மையில்) மறக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று; சூரியனுக்குக் கீழே செய்யப் படுகிறதொன்றிலும் அவர்களுக்கு இனி என்றைக்கும் (*olam* – ஓலாம் என்ற எபிரேய பதம் நீண்ட, திட்டமற்ற காலத்தைக் குறிக்கிறது) பங்கில்லை." "நீ போகிற பாதாளத்திலே (ஷியோலிலே) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." ஆதாமினால் உண்டான சாபத்தினால் சாகவேண்டும் என்பது மட்டுமாவது உயிருள்ளோருக்குத் தெரியும். தங்கள் சொந்த பாவங்களினாலும் தங்கள் சாவை அநேகமாக வெகு சீக்கிரத்தில் சம்பவிக்கச் செய்கின்றனர். ஆனால், மரித்தோர் ஒன்றும் அறியார்கள். அவர்கள் மரண நிலைமையில் – நரகத்தில் – ஷியோலில் முற்றிலும் உணர்வற்ற நிலைமையில் இருக்கிறார்கள். அவர்கள் துன்பத்திலோ இன்பத்திலோ இருக்கின்றார்கள் என்ற எண்ணத்தை இது நிராகரிக்கிறது. ஏனென்றால், உணர்வுடன் இருந்தால் இன்பத்தையோ அல்லது துன்பத்தையோ அறிவார்களே. பரலோகத்திலோ அல்லது வேதனையுள்ள இடத்திலோ அவர்கள் இருந்தால், தங்கள் நீதிக்காக ஆசீர்வாதத்தையும், அல்லது தாங்கள் செய்த பொல்லாப்பினிமித்தம் தண்டனையாக வேதனையையோ அடைந்திருப்பார்கள். மரித்தோர் சிநேகிக் கவும், பகைக்கவும், பொறாமைப்படவும் கூடாதபடி அறுப்புண்டு போனார்கள். ஆசீர்வாதமுள்ள பரலோகத்தில் இருந்தால் நீதிமான்கள் நிச்சயமாய்த் தொடர்ந்து நேசிப்பார்கள். பொல்லாதவர்களும் உணர்வோடிருந்தால் பகைப்பார்கள். தங்களை வதைப்பதற்காகத் தேவனை வெறுத்து, இன்ப நிலைமையில் இருப்பவர்கள் மேல் பொறாமைப் படுவார்கள். ஆகையால் நரகம் முற்றிலும் உணர்வற்ற ஓர் நிலைமையே தவிர வேறல்ல.

ஏசா. 63 : 16–ல் தேவரீர் எங்கள் பிதாவாயிருக்கிறீர்; ஆபிரகாம் எங்களை அறியான்; இஸ்ரவேலுக்கு (யாக்கோபுக்கு) நாங்கள் அறியப்பட்டவர்களுமல்ல" என்று கூறப்பட்டிருக்கிறது. ஏசாயா இந்த வசனத்தை எழுதும்போது, ஆபிரகாமும், யாக்கோபும் உணர்வற்ற மரண நிலைமையிலிருந்தனர் என்று இந்த வசனம் காட்டுகிறது; எனவே அவர்களுடைய பின் சந்ததியாரைப் பற்றி அவர்கள் ஒன்றும் அறியாதிருந்தனர். ஆகையால் சொல்லர்த்தமான ஆபிரகாம், உவமையின் சொல்லர்த்தமான ஐசுவரியவானிடம் சொல்லர்த்தமாகப் பேசியிருக்க முடியாது. ஏனென்றால், ஆபிரகாம் மரித்து ஒன்றும் அறியக்கூடாத நிலைமையில் இருக்கிறான்.

இறந்துபோன நமது நண்பரும், இனத்தாரும் நம்முடன் பேசக்கூடும் என்ற ஆவி மார்க்கத்தினுடைய போதனையை மேலே காட்டியுள்ள வேத வாக்கியங்கள் தெளிவாய் நிராகரிக்கின்றன என்பதை நாம் திட்டமாக அறிந்து கொள்வோமாக. ஆவி மார்க்கத்தின் விபரீதக் கொள்கைகளில் பெரும்பான்மையானவை மாயா ஜாலக் கைத் தந்திரங்களே. அசுத்த ஆவி பிடித்துக் கொண்ட ஊடகமான பேய்பிடித்தவன் (medium) பொய் சொல்லி ஏமாற்றுகிறான். ஆனால், அந்த நிகழ்ச்சிகளில் பொல்லாத ஆவிகளின் கிரியைகளே அதிகமாயிருக்கும். மரித்துப்போனவர்களின் ஆவிகள் ஊடகமான மனிதனில் புகுந்து, உயிரோடிருக்கிற நம்மிடம் பேசுவதாக ஆவி மார்க்கத்தார் கூறுவது முற்றிலும் பொய். இறந்துபோன நம்முடைய நண்பர் மற்றும் உறவினர் என்று பொய் சொல்லி நடித்துப் பிசாசுகளே ஊடகத்தின் மூலம் உயிரோடிருக்கிற நம்மிடம் பேசுகின்றன. நம்முடைய வாழ்க்கையின் இரகசியங்கள் இவைகளுக்குத் தெரியும். நமது வாழ்க்கையின் இரகசியங்களை இவைகள் அறியக்கூடும். நமது சிந்தனைகளை இவை அறியக்கூடியதால், நமக்கும்

இறந்துபோன நமது நண்பர், உறவினருக்கு மட்டுமேயன்றி வேறொருவருக்கும் தெரியாத நாம் நினைக்கிற காரியங்களை இப்பேய்கள் தெரிந்து கொள்ளுகின்றன. இவைகளுக்கு நாம் செவிகொடுத்தால், ஆவிமார்க்கக் காட்சிகளில் நம்முடன் பேசுவது இறந்து போன நம்முடைய நண்பர் அல்லது இனத்தாரின் ஆவிகளென்று நம்மை நம்பவைக்க முயற்சிப்பதில், இந்த அறிவை உபயோகிக்க, இவைகள் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்கின்றன. "மரணம் ஒரு அறிவற்ற நிலைமை" என்ற சத்தியத்தை நாம் புரிந்து கொண்டாலொழிய, சாத்தானின் இப்பெரிய வஞ்சகத்தில் நாம் வீழ்ந்து, அவனுக்குக் கீழடங்கிப் போவோம்.

### மரண நிலைமையை நித்திரை விளக்குகிறது

மரணத்தின் நிலைமையை விளக்க வேதாகமம் நித்திரையையும் உருவகமாக உபயோகிக்கின்றது. ஏனென்றால், ஒருவன் கனவு காணாமல், ஆழ்ந்த நித்திரை செய்யும்பொழுது, தன்னைச் சுற்றிலும் நடக்கும் எதையும் அறியாதவனாய் உணர்வற்ற நிலைமையில் இருக்கிறான்.

தானி. 12 : 2 "பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்." மரித்தோர் பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாக இங்கே கூறப்படுகிறது. ஆனால் குறித்த காலத்தில், மேசியா பூமியில் அரசாள வரும்பொழுது அவர்கள் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். ஆகையால், மரண ஸ்திதியில் அவர்கள் உணர்வற்றிருக்கிறார்கள். எனவே துன்பத்திலோ அல்லது இன்பத்திலோ அவர்கள் இல்லை. நல்லவர்கள் ஜீவனைப் பெறுவதாகவும், பொல்லாதவர்கள் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் வருவதாகவும் சொல்லப்படுகிறது. ஆகையால், இவர்கள் உயிர்த்தெழுதல் வரை ஜீவனோடிருக்க வில்லை.

யோவா. 11 : 11 "இயேசு அவர்களை நோக்கி, நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை (நித்திரையிலிருந்து) எழுப்பப் போகிறேன்" என்றார். பெத்தானியா ஊரானான தம்முடைய சிநேகிதன் லாசருவின் மரண நிலைமையை விளக்கிக் காட்ட இயேசு உருவகமாக "நித்திரை" என்ற பதத்தை உபயோகித்தார். அவர் சொன்னதின் கருத்தை சீஷர்கள் புரிந்து கொள்ளாமல், லாசரு குணமடைந்து வருகிறானென்று அவர் கூறுவதாக அவர்கள் எண்ணினார்கள். பின்பு அவர் "லாசரு மரித்துப் போனான்" என்று வெளிப்படையாய்ச் சொன்னார். (வச. 12-14). "அவனை நித்திரையிலிருந்து எழுப்பும்படி நான் போகிறேன்"என்றார். அவர் பெத்தானியாவுக்கு வந்து சேர்ந்தபொழுது மார்த்தாள் அதை முதலாவது கேள்விப்பட்டு, அவரிடம் வந்து, "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால், என் சகோதரன் மரித்திருக்க மாட்டான்" என்றாள். (வச. 21). இயேசுவின் நண்பனான லாசரு நிச்சயமாய் வேதனையுள்ள இடத்திற்குப் போக மாட்டான். ஏனென்றால், அவன் ஒரு நல்ல மனிதன். ஆகையால், உவமையின் சொல்லர்த்தத்தை நம்புகிறவர்கள் எண்ணுகிறபடி பெத்தானியா ஊரானான லாசரு பரலோகத்தில் இருந்தான். இயேசு தம் கண்களை வானத்திற்கு ஏறெடுத்து, ஆசீர்வதிக்கப் பட்டவர்களுடனே தமது நண்பன் லாசரு சந்தோஷமாய் இருக்க கண்டு, மேரி, மார்த்தாள் முதலியோரின் துக்கத்தைப் போக்கப் பின்வருமாறு சொல்லியிருக்கலாம். "லாசருவே! கீழே வா, உன் சகோதரிகளைச் சஞ்சலத்தில் ஆழ்த்திவிட்டு, அவர்கள் துக்கத்தில் இருக்கையில், நீ பரலோக இன்பங்களை அனுபவிக்க நான் அனுமதிக்க மாட்டேன். சாபத்தீடான இப்பூமிக்கு நீ வந்து அவர்களை ஆறுதல் படுத்தும்படி மீண்டும் நான் உன்னைக் கீழே கொண்டுவர வேண்டும்." இயேசு இப்படி ஏதாவது சொன்னாரா? நிச்சயமாய்ச் சொல்லவே இல்லை!

அல்லது அவர் பூமியின் ஆழங்களைப் பார்த்து "ஆ! லாசருவே! நான் உன்னைக் கீழே வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறவனாகக் காண்கிறேன். ஒரு இமைப் பொழுதுங்கூட நான் இனி சகியேன். தங்களுடைய முக்கூர் ஈட்டி, வேல், கொரடு முதலிய வதைக்கும் ஆயுதங்களை எறிந்துவிட்டு உன்னை மேலே அனுப்பும்படி அந்தப் பேய்களுக்குச் சொல்லு. இந்த அகோர வாதையிலிருந்து நான் உன்னை எழுப்ப வேண்டும்" என்று இயேசு சொல்லவில்லை. லாசருவே மேலே ஏறிவா என்றாவது லாசருவே கீழே இறங்கிவா என்றாவது அவர் சொல்லாமல் லாசருவே வெளியே வா என்றுதான், நிச்சயமாய்ச் சொன்னார். ஜீவனோடிருந்து, உணர்வுள்ளவனாக இன்பத் தையோ துன்பத்தையோ அனுபவித்துக் கொண்டிருந்த உயிருள்ளவனாக அல்ல, யூத வழக்கத்தின்படி பிரேதச் சீலைகளால் கையும் காலும் கட்டப்பட்டு மரித்திருந்த அவன் வெளியே வந்தான். இயேசு அவர்களை நோக்கி இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள்" என்றார். (வச. 43, 44) அவர்கள் அப்படியே செய்தார்கள்.

இவ்விதமாய் லாசரு மெய்யாகவே மரித்துப் போயிருந்தான். அவன் உணர்வற்ற மரண நிலைமையில் இருந்தான். அந்த நிலைமையிலிருந்து இயேசுவின் வல்லமையான கட்டளையால் வெளியே வந்தான். பிரமித்துப் போன அவனுடைய சகோதரிகளிடம் உயிருள்ளவனாக ஒப்படைக்கப்பட்டான். தான் மரித்திருந்த அந்த நான்கு நாட்களும் நடந்ததை கதை போலச் சொல்ல அவனுக்கு ஒன்றுங் கிடையாது. தேவனும் தேவ தூதரும் எப்படியிருந்தனரென்று பரலோக மகத்துவங்களை அவன் கூறவில்லை. கொம்புகளுடன், விரி குளம்பும், பிளந்த நாக்கும், பிரிந்தவாலும், அஸ்பெஸ்டோஸ் கைப்பிடியுள்ள முக்கூர் ஈட்டி, வேல் முதலிய வதைக்கும் ஆயுதங்கள் உள்ளவையும், அகோர நெருப்பிலும் வாழக்கூடிய பேய்களைப் பற்றிய கதைகளையும் அவன் சொல்லவில்லை. இப்பேர்ப்பட்ட பயங்கர விஷயங்களை அவன் கனவிலும்கூட அறியான். இவை எல்லாம் இருண்ட யுகத்திலே உருவாக்கப்பட்டன. அவன் உண்மையிலேயே மரித்துப் போனான். மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்.

இதைப் போலவே அப்.7 : 60-ல் முதல் இரத்தச் சாட்சியான ஸ்தேவானைப் பற்றியும் நாம் வாசிக்கிறோம். "அவனோ ....... இவர்கள்மேல் இந்தப் பாவத்தை சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொல்லி ........ நித்திரை யடைந்தான்." வேதனையுள்ள இடத்திற்கோ அல்லது பரதீசுக்கோ அவன் போகிறதாகக் கூறப்படவில்லை. உணர்வற்ற மரண நிலைமையில் நித்திரையடைந்தான் என்று மாத்திரம் சொல்லியிருக்கிறது. அப். 13 : 36-ல் "தாவீது ...... பின்பு நித்திரையடைந்து, தன் பிதாக்களிடத்திலே சேர்க்கப்பட்டு அழிவைக் கண்டான் என்று பவுல் அப்போஸ்தலன் கூறுகிறார். அப். 2 : 34-ல் "தாவீது பரலோகத்திற்கு எழுந்து போகவில்லை. நித்திரையடைந்தான்" என்று மாத்திரம் கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனம் சங். 16 : 10-ஐ மறுக்கிறதாகச் சிலர் நினைக்கலாம். அப். 2 : 25-32-ல் காட்டப்பட்டிருக்கிறபடி தீர்க்கதரிசனமாக இயேசுவைக் குறித்து தாவீது சங்கீதத்திலே கூறியிருக்கிறாரென்று நாம் அறிந்து கொள்ள வேண்டும். 1 கொரி. 15 : 17, 18, 20-ம் வசனங்களைக் கவனியுங்கள். "கிறிஸ்து எழுந்திராவிட்டால் ..........

கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் அழிந்திருப் பார்களே." ஆனால் இப்பொழுது கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மரண ஸ்திதியிலிருந்தபோது இயேசு நித்திரையடைந்திருந்தார். அவர் மரித்தோரிலிருந்து எழுப்பப்படாவிட்டால் கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் அழிந்தே போயிருப்பார்கள். அவர்கள் அழிவு நிலைமையிலேயே இருந்திருப்பார்கள். அந்த அழிவு நிலைமை என்பது நிச்சயமாக வேதனையிலோ, இன்பத்திலோ நித்திரை செய்வதாகாது.

மரண ஸ்திதி அதாவது நரகம், ஷியோல், ஹேட்ஸ் என்பது பரிசுத்த வேதாகமத்தில் நித்திரைக்கு ஒப்பிடப்பட்ட, உணர்வற்ற, மறதியின் நிலைமை என்று மேற்கூறப்பட்ட வேத வாக்கியங்கள் தெளிவாய்ப் போதிக்கின்றன. இவற்றிற்குப் பொருத்தமாக மற்ற பல வேத வாக்கியங்களை நாம் எடுத்துக் கூறலாம். ஆனால் இந்த உவமைக்குச் சொல்லர்த்தமான பொருள் கூறுவதை மறுப்பதற்கு மேற் கூறப்பட்ட வாக்கியங்கள் போதுமானது ஆகும்.

## சொல்லர்த்தமான விளக்கம் சாத்தானின் பொய்யை அடிப்படையாகக் கொண்டது

**(4)** சொல்லர்த்தமான விளக்கத்தின் உபதேசம் சாத்தானுடைய முதற் பொய்யை அஸ்திபாரமாகக் கொண்டது. யோவா. 8 : 44 "நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை நீ புசிக்க வேண்டாம். அதை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய்" என்று (ஆதி. 2 : 17) தேவன் ஆதாமுக்குச் சொன்னார். சாத்தான் ஏவாளிடம் "நீங்கள் சாகவே சாவதில்லை (ஆதி. 3 : 4, 5) அதை தேவன் அறிவார். நன்மை, தீமை அறிந்து நீங்கள் தேவர்களைப் போல இருப்பீர்கள்" என்று தேவனை நேர்முகமாய் எதிர்த்து அகம்பாவமாய்க் கூறினான். "நீங்கள் உள்ளபடியே நிச்சயமாய்ச் சாவதில்லை; உண்மையில் நீங்கள் மேலும் உயிருடன் இருப்பீர்கள். ஆனால் உங்கள் ஜீவனின் இயல்பை மாற்றிக் கொள்வீர்கள். மானிட இனத்திலிருந்து ஆவி ஜீவிகளின் இனத்திற்கு (தேவர்களாக) மாற்றிக் கொள்வீர்கள். நான் உங்களுக்கு சொன்னது போல நீங்கள் செய்தால் மாறிப் போன அந்த வாழ்வில் இன்பம் அடைவீர்கள்; அப்படிச் செய்யாவிடில் தீமையை அறிவீர்கள். அதாவது வதைக்கப் படுவீர்கள்" என்று சாத்தான் பொய் சொன்னான். இவ்விதமாகத்தான் இப்பயங்கர நித்திய நரக வேதனையின் உபதேசம், சாத்தானுடைய முதல் பொய்யை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மரித்தோர் உணர்வற்ற நிலைமையில் இருக்கின்றனர் என்ற வேத உபதேசத்திற்கு, இந்தப் பொய் நிச்சயமாய் எதிராக இருக்கிறது. ஏறக்குறைய உலக மக்கள் அனைவரையும் வஞ்சித்து ஏமாற்றிய மாபெரும் பொய் இதுவே. இவ்வஞ்சகத்திற்குத் தப்பியவர்கள் வெகு சிலரே. இவ்வுவமையின் சொல்லர்த்த விளக்கம் இப்பொய்யை அஸ்திபாரமாய்க் கொண்டிருப்பதால் அது முற்றிலும் உண்மையற்றதென நாம் தள்ளிப்போடுகிறோம்.

**(5)** உவமைகளைச் சொல்லர்த்தப்படுத்துவது தப்பிதமாகும். ஏனென்றால், உவமை விளக்க முறைக்கு அது முற்றிலும் விரோதமானது. உவமைகளை உவமைகளாகவே கொண்டு பொருள்கூற வேண்டும். அவற்றை இயற்கையான சரித்திரங்களாக, நடந்த வாஸ்தவமான சம்பவங்களாகப் பாவிக்கலாகாது. உதாரணமாக நான்கு வகை நிலங்களைப் பற்றி (மத். 13 : 3-23) இயேசு சொன்னபொழுது அவர் இயல்பான நிலங்களைப் பற்றிக் கூறவில்லை; ஆனால், தேவனுடைய வசனம் விதைக்கப்பட்ட நான்குவித இருதயங்களைத்தான் குறிப்பிட்டார். (உ-ம்) வழியருகே உள்ளவர்கள் சத்தியத்தை ஒப்புக் கொள்ளாத கடின இருதயமுள்ளவர்கள். கள்ளப் போதகர்களும், பிசாசுகளுமாகிய பறவைகள் வந்து விதைகளாகிய சத்தியத்தை அவர்களுடைய இருதயங் களிலிருந்து எடுத்துக் கொண்டு போக அனுமதிக்கிறார்கள். மேலும் கோதுமையும், களையும் (மத். 13 : 24-30) என்ற உவமையையும் சொல்லர்த்தமாக எடுக்கக்கூடாது. இயற்கையான கோதுமையையோ களைகளையோ எவரும் விதைக்கவில்லை. தேவனுடைய ஜனங்களைக் குறித்த அடையாளமான கோதுமையையும் பெயர்க் கிறிஸ்தவர்களைக் குறித்த களையையும் விதைத்தாகக் கூறப்படுகிறது. இவற்றைப் போலவே ஐசுவரியவானும் லாசருவும் என்ற உவமையும் உவமையாகவே விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். உவமைகளை விளக்க வேண்டிய நியாயமான வழக்கத்திற்கு சொல்லர்த்த விளக்கமானது விரோதமாய் இருக்கிறது.

**(6)** ஐசுவரியவான் எவ்வித தீமையும் செய்தவனாகச் சொல்லப்படாததினால் சொல்லர்த்த விளக்கம் அநியாயமான தண்டனை முறையைப் போதிக்கிறது. ஐசுவரியவானாக இருப்பது பாவமல்ல. தேவன்தாமே மிகுந்த ஐசுவரியமுள்ள வராகவே இருக்கிறார். அப்படியே ஆபிரகாமும் செல்வந்தனாக இருந்தான். (ஆதி. 13 : 2). சரீர ஆரோக்கியத்துடன் இருக்கும் ஒருவன் சம்பிரமமாய்ச் சாப்பிடுவது பிழையல்ல. இரத்தாம்பரமும், விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, ஒரு பிச்சைக்காரனுக்கு மிச்சமீதியைக் கொடுத்துப் போஷித்தது பிழையல்ல. ஐசுவரியவான் அப்படிக் கொடுத்திராவிட்டால், லாசரு வேறொரு இடத்திற்குப் போயிருப்பான். ஐசுவரியவான் லாசருவுக்குக் கொடுத்தான் என்று மறைவாகக் கூறப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் ஒருவனை நித்திய நரக வேதனைக்குக் கொண்டு போனால் நம்மில் அநேகர் அங்கேதான் போய்க் கொண்டிருக்கிறோம். நாம் நல்ல ஆடைகளை எறிந்துவிட்டு ஒருபொழுதும் திருப்தியாய் நல்ல உணவு சாப்பிடாமல் பசியுடன் இருப்போமாக. எனவே சொல்லர்த்தமான விளக்கம் நிச்சயமாகத் தப்பறையானதோர் முறை என்பது தெளிவாயிருக்கிறது.

**(7)** சொல்லர்த்தமான விளக்கம் தப்பிதமான இரட்சண்ய முறையைப் போதிக்கிறது. லாசருவைப் பற்றி நல்லதாக ஒன்றும் கூறப்படவில்லை. பசியாய் இருப்பது எந்த நற்குணத்தையும் காட்டுவதாக இல்லை. ஐசுவரியவான் வீட்டு வாசலிலே பிச்சைக்காரனாய்த் துவண்டு கிடந்து, அவன் மேசையிலிருந்து விழும் எச்சில் சோற்றினாலே தன் பசியைப் போக்க ஆசைப்பட்டு உடல் முழுவதும் புண்கள் நிறைந்தவனாய், அவற்றை நாய்கள் நக்கவுமான பரிதாப சங்கட நிலைமையிலிருப்பதால் என்ன சற்குணமுண்டு? நாம் இரட்சிப்படைய இதுதான் வழியானால் லாசருவைப் போல நாம் ஒரு பிச்சைக்காரனாக வேண்டும். யாராவது ஒரு ஐசுவரியவான் வாசலில் உட்கார வேண்டும். பசியடைந்து அவன் மேஜையிலிருந்து விழும் எச்சிச் சோற்றை உண்டு, பருக்கள் நிறைந்தவர்களாகி, அவற்றை நாய்கள் நக்கும்படி செய்ய வேண்டும். ஆகையால் சொல்லர்த்தமான விளக்கம் தப்பிதமான இரட்சண்யமுறையைப் போதிக்கின்றது.

## சொல்லர்த்தமான கருத்து, செய்யக்கூடாததும் மூடத்தனமுமான கொள்கையாகும்

**(8)** சொல்லர்த்த விளக்கம் ஒருபோதும் நடக்கக் கூடாததும் முற்றிலும் மூடத்தனமுமான விஷயங்களையும் போதிக்கிறது. ஆபிரகாமின் மடியை நாம் எடுத்துக் கொண்டால் அது எத்தனை பிச்சைக்காரருக்கு இடங்கொடுக்கும்? அல்லது

லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் முக்குகின்ற விஷயத்தை யோசித்துப் பாருங்கள். அக்கினி ஜுவாலையில், விரலின் நுனியிலுள்ள நீர் நீராவியாய்ப் போகாமல் விரல் நுனியில் இருக்கக்கூடுமா? சொல்லர்த்தமான அக்கினி யினாலுண்டாகும் தாகவேட்கையினின்று, அவன் நாக்கு குளிர்ந்து, தாகந்தனிய வேண்டுமானால், ஐசுவரியவானுக்கு வேண்டியது ஒரு சொட்டுத் தண்ணீரல்ல. அதிகமான தண்ணீர் வேண்டியதிருந்திருக்கும். நரகத்தின் அக்கினியை அவிப்பதற்கு ஆழ்கடல் நீரனைத்தையுமே ஊற்றும்படி அவன் கேட்டிருக்கலாம். எரிநரக உபதேசத்தை வெகு ஊக்கமாய்ப் பிரசங்கிக்கிறவர்கள் வர்ணிக்கிறபடி, அவிக்க முடியாத சொல்லர்த்தமான அக்கினியில் உழலும் அவனை அடையுமுன்பே, கடல்நீர் அனைத்துங்கூட நீராவியாய்ப் போய்விடும். இதற்கடுத்த மூடத்தனமும், ஒருபொழுதும் சாத்தியப்படாததுமான ஒருவிஷயம் என்னவென்றால், "நடுவேயுள்ள பெரும்பிளப்பு." இப்பிளப்பைச் சொல்லர்த்தமாக எடுப்போமானால் (லூக். 16 : 26) இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்து போகவும் ...... மனதுள்ளவர் களுக்குங்கூடாதபடிக்கு ........" என்று கூறப்பட்டிருப்பதில், ஒருபோதும் நடக்கக்கூடாததும், மூடத்தனமுமான ஓர் விஷயத்தைக் கூறுவதாக இருக்கிறது. பைத்தியம் பிடித்தவர்களைத் தவிர, சொஸ்தப் புத்தியுள்ள யாராவது, இன்பமுள்ள இடத்தைவிட்டுத் துன்பமுள்ள இடத்திற்குத் தானாகப்போக விரும்புவானா? மேலும், விசேஷித்த வல்லமையுள்ள தூதர்களும் மற்றும் ஆவி ஜீவிகளும் கடந்து செல்லக்கூடாதபடி ஓர் இயல்பான பிளப்பு எப்படித் தடுக்கக்கூடும்? ஆகையால் சொல்லர்த்தமான விளக்கம் எவ்வளவு மூடத்தனமானதென்று பாருங்கள்.

**(9)** சொல்லர்த்தமான விளக்கம் ஆத்துமாவைப் பற்றி அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கைக்கு விரோதமானது. ஆத்துமா பற்பல பாகங்கள் உள்ளதாக உண்டாக்கப்படவில்லை என்று கூறுகிறார்கள். ஆத்துமா காணக் கூடாததும், அணுதரிசினியாலும் (microscope) பார்க்கக்கூடாத அளவு நுண்ணியதும், பகுக்கக்கூடாததும், உட்புறம் வெளிப்புறம் இல்லாததும் கோடானுகோடி ஆத்துமாக்களையுங்கூட ஒரு டப்பியில் அடைக்கக்கூடியபடி அவ்வளவு நுண்ணியவைகளாக இருக்கின்றனவாம். மனித உடலை மரணத்திற்கு முன்பும் பின்பும் நிறுத்து (எடைபார்த்து), பிரிந்துபோன ஆத்துமா எடையற்றது என்று கண்டுபிடித் திருக்கிறார்கள். ஆனால், இவை எல்லாம் உவமையைப் பற்றிக்கூறும் அவர்களின் விளக்கத்திற்கு முரணாயிருக்கிறது. ஏனென்றால், ஐசுவரியவான், துன்பத்தை அனுபவிக்கும் அவயவங்கள் உள்ளவனாகவும் இருந்ததாகத் தெரிகிறது. ஆகையால் இவ்வுவமையின் சொல்லர்த்த விளக்கம் ஆத்துமாவைப் பற்றிய அவர்களின் கொள்கைக்கு விரோதமாய் இருக்கிறது.

**(10)** சொல்லர்த்த விளக்கம், தேவனுடைய ஏற்பாட்டின் மூன்று நோக்கங்களுக்கும் விரோதமாய் இருக்கிறது. அவை **(1)** தேவனை மகிமைப்படுத்துவதும் **(2)** கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதும் **(3)** தேவனுடைய ஏற்பாட்டிற்கு இசைவாக மனுக்குலத்துக்கு ஆசீர்வாதத்தைக் கொண்டுவருவதுமாகும். இறந்தவுடன் மனிதரைத் தேவன் வதைக்கிறதானால் அது அவருக்கு மகிமையாய் இராமல், அவரை இழிவுப்படுத்துவதாகும். தேவனுடைய நான்கு பிரதான குணங்களான ஞானம், நீதி, வல்லமை, அன்பு முதலியவற்றில் ஒவ்வொன்றையும் மீறிப் பங்கப்படுத்துவதாகும். அதுபோல தேவனுடைய சகல ஏற்பாடுகளையும் அவருடைய பிரதிநிதியாக நின்று நடத்தும் கிறிஸ்துவையும் இது இழிவுபடுத்தும். "ஆபிரகாமின் சந்ததிக்குள் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 22 : 18) என்ற வாக்கின்படி, முதலாவது தெரிந்தெடுப்புக்கு உட்பட்டவரையும் பின்பு தெரிந்தெடுப்புக்கு உட்படாத மற்ற அனைவரையும் ஆசீர்வதிக்கிற பிரதான நோக்கமுள்ள தேவ ஏற்பாடு நிறைவேற்றப்படுவதை அது தடுக்கும்.

**(11)** சொல்லர்த்தமான விளக்கம் ஆபிரகாமை ஒரு பொய்யனாக்குகிறது. ஏனென்றால் ஆபிரகாம் ஐசுவரியவானை நோக்கி "உன்னுடைய ஐந்து சகோதரர்களுக்கும் அங்கே மோசேயும் தீர்க்கதரிசிகளும் உண்டு. அவர்களுக்கு அவன் செவிக்கொடுக்காவிட்டால், மரித்தோரிலிருந்து ஒருவன் எழும்பிப் போனாலும் அவர்கள் நம்ப மாட்டார்கள்" என்று சொன்னதாகக் கூறப்பட்டிருக்கிறது. இயேசுவும் அப்போஸ்தலர்களும் செய்த பிரசங்கங்களை நம்பாத அநேகர், பேதுரு தொற்காளை உயிரோடு எழுப்பினவுடன் (அப். 9 : 42) அவன் சொன்னதை விசுவாசித்தார்கள். அதுபோலவே, இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினபொழுது அவரைச் சிலர் விசுவாசித்தார்கள். (யோவா. 11 : 45). எனவே ஆபிரகாமின் சொற்களைச் சொல்லர்த்தமாய் எடுத்தால் மேற் கூறப்பட்ட இரண்டு சம்பவங்கள் விஷயத்தில் அவர் பொய் பேசியிருப்பதாகத் தோன்றுகிறார். ஆதலால் சொல்லர்த்தமான விளக்கத்தைத் தள்ளிப் போடுவோமாக. ஏனென்றால், அது தேவனுடைய ஏற்பாட்டிற்கு விரோதமாய் இருக்கிறது.

**(12)** சொல்லர்த்தமான விளக்கம் "சந்தர்ப்ப சூழ்நிலைக்கு" எதிரிடையானது. (லூக். 16 : 14–18) கிறிஸ்துவின் நாளில் பரிசேயரும் வேதபாரகரும் மோசேயின் நியாயப்பிரமாண யுகத்து மதபோதகராயிருந்தனர். ஆதலால், மோசேயின் நியாயப் பிரமாணத்திலிருந்து அவர்கள் போதித்தவற்றிற்குக் கீழ்ப்படி யும்படி ஜனங்களுக்கு இயேசு கூறினார். (மத். 23 : 2, 3) ஆனால், தேவனால் அனுப்பப்பட்ட போதகரெல்லாரிலும் மிகப் பெரியவரான இயேசுவை இந்த மத போதகர்கள் அவமதித்தனர். அவரோ இந்தப் போதகர்கள் தம்மைப் பற்றி என்ன எண்ணுகிறார்களென்றும் அறிந்து (வச.15) "நீங்கள் மனிதர் முன்பாக உங்களை நீதிமான்களாகக் காட்டுகிறவர்கள்," என்று அவர்களிடம் கூறினார். தேவனுடைய பார்வையில் அவர்களின் இருதயம் அருவருப்பாய் இருக்கும்பொழுது, மனிதர் முன்பாகத் தங்களை நீதிமான்களாகக் காட்ட விரும்பினார்கள். தம்முடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிறவர்கள் தாழ்மையுள்ளவர் களாய் இருக்க வேண்டும் என்று தேவன் கேட்கும்பொழுது இவர்கள் பெருமையும் பொல்லாங்கும் நிறைந்தவர்களாய் இருந்தனர். "நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசன வாக்கியங் களும் யோவான் வரைக்கும் வழங்கி வந்தது." (வச. 16) [மேசியாவை அறிமுகப்படுத்தின யோவான் ஸ்நானன் காலம் வரை அவை இருந்தன]. அக்காலத்தில் இருந்து "தேவனுடைய இராஜ்யம் சுவிசேஷமாய்ப் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. யாவரும் அதில் பலவந்தமாய்ப் பிரவேசிக்கிறார்கள்." அதாவது அதுமுதல் சுவிசேஷ யுகமான ஒரு புதிய சகாப்தம் – நேமகம் – தொடங்கியிருக்கிறது. தேவனுடைய அந்த இராஜ்யத்தின் ஓர் அங்கமாக இருக்க விரும்புகிறவர்கள், பலவந்தமாய்ப் பிரவேசிக்கின்றனர், என்று இயேசு தொடர்ந்து கூறினார். நியாயப்பிரமாணத்தின் ஒரு சிறு உறுப்புக்கூடத் தவறுவதைக் காட்டிலும் வானமும், பூமியும் அழிந்து போவது இலகுவாய் இருக்கும் என்று மேலும் இயேசு கூறினார். நியாயப் பிரமாணத்தின் மிகச் சிறிய ஒரு பாகங்கூடத் தவறாது. தேவன்தாமே அவற்றை உண்டாக்கி இருக்கிறார். தாம் முயற்சிக்கிற எதிலும் தேவன் ஒருக்காலும் தவறவே மாட்டார். (ஏசா. 14 : 27)

தன் மனைவியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான். தன் கணவனால் தள்ளப்பட்டவளை விவாகஞ் செய்கிறவனும் விபசாரஞ் செய்கிறான்," என்று ஒரு நிகரற்ற திருமண சம்பந்த ஒழுங்கை இயேசு கூறினார். ஏன் இதை அவர் சொன்னார்? (ரோம. 7 : 1-6)-ல் கூறியிருப்பதை நாம் வாசித்தால் யூதர்களில் யாராவது ஒருவன், சுவிசேஷ யுகத்தில் மோசேயை தள்ளிவிட்டு, கிறிஸ்தவ மதத்தைத் தவிர முகமதிய மார்க்கம் போன்ற வேறே ஏதாவதொன்றில் சேர்ந்து, தம்மை விசுவாசிக்கிறவர்கள் நீதிமான்களாவதற்கு நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாகிய (முடிவாகிய) (ரோம. 10 : 4) இயேசுக் கிறிஸ்துவைச் சேராமல், அவ்விதமாய் நியாயப்பிரமாணத்தை விட்டு விலகுவானானால், கிறிஸ்துவை மணம்புரிந்து கொள்ளாது வேறொருவரை மணம் புரிந்து விபசாரஞ் செய்கிற அடையாளமான ஓர் பெண்ணின் ஒரு பாகமாவான் என்று பவுல் காட்டுவதை நாம் காண்கிறோம். ஆனால் அவன் கிறிஸ்துவின் மணவாட்டியின் ஒரு பாகம் ஆவானானால், அடையாளமான வேசியின் ஒரு பாகம் ஆகமாட்டான். கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி விட்டதால் (கொலோ. 2 : 14) தேவனே ஒழுங்குப் பண்ணி அவரே அனுமதியளித்த ஒரு காரியத்தை அவன் செய்தவனாவான். (ரோம. 7 : 4) நியாயப்பிரமாண உடன்படிக்கையின் யுகம் முடிவடைந்து, தேட முடியாத கிறிஸ்துவின் ஐசுவரியத்தைப் பற்றி அறிவிக்க யுகம் முழுவதும் தமது பிரதிநிதிகளாகத் தேவன் உபயோகித்துக் கொண்டிருக்கிற இயேசுவும், அப்போஸ்தலரும் மற்றும் சகோதரரும் ஊழியஞ் செய்த கிருபையின் உடன்படிக்கைக்குரிய சுவிசேஷ யுகம் ஆரம்பிக்கிறதினால் உண்டான யுகங்களின் மாறுதலை விளக்கிக் காட்டவே இந்த உவமையை இயேசு உபயோகித்தார். இப்படியாக சொல்லர்த்தமான விளக்கம் நிச்சயமாகவே தகாதது என்று சந்தர்ப்பம் நிரூபிக்கின்றது: ஏனென்றால், சொல்லர்த்த விளக்கமானது, சந்தர்ப்பத்திற்கு இசைவாக அதைப் பிரயோகிக்கக்கூடாதபடி செய்து உவமையைப் பொருத்த மற்றதாக்கிவிடுகிறது.

## உவமையின் அறிகுறியான (சரியான) விளக்கம்

இந்த உவமையின் சொல்லர்த்தமான விளக்கத்திற்கு எதிராகப் பன்னிரண்டு பலமான ஆட்சேபனைகளை இம்மட்டும் எடுத்துக்காட்டி, இப்பொழுது உவமையின் அறிகுறியான – சரியான – விளக்கம் என்ன என்பதை ஆராய்ந்தறிய நாம் ஆயத்தமாய் இருக்கிறோம். ஐசுவரியவான் மாம்ச இஸ்ரவேலரை அல்லது யூத ஜாதியைக் குறிக்கின்றான் என்று நாம் அறிகிறோம். அவன் மரிக்குமுன் யூத யுகத்திலுள்ள மாம்ச இஸ்ரவேலரையும், மரித்தபின் சுவிசேஷ யுகத்திலுள்ள மாம்ச இஸ்ரவேலரையும் ஐசுவரியவான் அடையாளமாகக் காட்டுகிறான். இந்த ஜாதி தேவனுடன் செய்திருந்த உடன்படிக்கைக்கு உண்மையாய் இருந்திருந்தால் இராஜரீக ஆசாரியக் கூட்டமாவதற்குத் தேவன் அவர்களுக்கு வாக்குத்தத்தஞ் செய்திருந்தார். (யாத். 19 : 5, 6). பிரதான ஆசாரியர் அணிகிற சணல் வெண் வஸ்திரமும், இரத்தாம்பரமும் இராஜரீகத்தையும் ஆசாரியத்துவத்தையும் குறித்துக் காட்டுகிறது. அவர்களுக்கு மாத்திரம் தேவன் கொடுத்த நியாயப்பிரமாணம், தீர்க்கதரிசனங்களாகிய சம்பிரமமான விருந்தை உண்டு மகிழ்ந்தனர். புறஜாதிகளுக்குத் தேவன் இவைகளைக் கொடுக்கவில்லை. (ரோம. 3 : 1, 2; 9 : 4). அவர்கள் கிறிஸ்துவைத் தள்ளினபொழுது, தேவனுடைய விசேஷித்த கிருபைபெற்ற ஜனமாய் இராதபடி அவர்கள் நீக்கப்பட்டதை ஐசுவரியவானுடைய மரணம் குறித்துக் காட்டுகிறது. தேவனுடைய ஜனங்களாய் இராதபடி அவர்கள் நீக்கப்பட்டதை ஐசுவரியவானுடைய மரணம் குறித்துக் காட்டுகிறது. தேவனுடைய ஜனங்களாய் இராதபடி அவர்கள் தள்ளப்பட்டனர். (மத். 23 : 38; 21 : 43); ஆனால் சதா காலமும் அல்ல. ஏனென்றால், பவுல் சொல்லுகிறது போல, அவர்கள் மறுபடியும் அவருடைய ஜனங்களாக ஆயிர வருட ஆட்சி காலத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். (ரோம. 11 : 7-15, 25-31). ஆனால் சுவிசேஷ யுகத்திலே, ஒரு ஜாதியாகவும் தேவனுடைய ஜனங்களாகவும் அவர்கள் இருந்த நிலைமையிலிருந்து, அவர்கள் தள்ளப்பட்டார்கள். இப்படி அவர்கள் தள்ளப்பட்ட நிலைமையைத்தான் ஐசுவரியவானின் மரணம் குறிக்கிறது. மரண நிலைமையைத்தான் அவன் ஹேட்ஸ் (Hades), பாதாளத்திற்கு, நரகத்திற்கு, மறதியின் நிலைமைக்கு அனுப்பப்பட்டானென்று அறிகுறியான அடையாள வார்த்தை களில் கூறியிருக்கிறது.

பிச்சைக்காரனான லாசரு தேவனுக்குப் பயந்த புறஜாதியாரைக் குறிக்கிறான். யூத யுகத்திலே ஐசுவரிய வானுடைய மேஜையிலிருந்து விழுந்த ரொட்டித் துணிக்கை களான சத்தியங்களாலும் கிருபையாலும் இவர்கள் தங்களை நிரப்ப ஆசையாய் இருந்தனர். இவ்விதமான துணிக்கைகள் அவர்களுக்கு அடிக்கடி கிடைத்தும் இருந்தன. (யோசு. 2 : 14; 1 இராஜா. 10 : 3, 13; 2 இராஜா. 5 : 9, 10; தானி. 2 : 47; மாற். 7 : 25-30) மனுக்குலத்தின் பாவசாபங்களினாலுண்டான குற்றங்குறைகள், தோஷங்களில் இருந்து அவர்களைக் குணமாக்க முயன்ற (புறமதஸ்தரான தத்துவஞானிகளை) சாக்ரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் முதலியவர்களை லாசருவின் பருக்களை நக்கின நாய்கள் குறித்துக் காட்டுகின்றன. ஆனால் இவர்களால் அவனைக் குணப்படுத்த முடியவில்லை.

இஸ்ரவேலருடைய காணியாட்சிகளுக்குப் புறம்பான வர்களும், வாக்குத்தத்த உடன்படிக்கைக்கு அந்நியரும் (இந்தக் காலம் வரை இவை இஸ்ரவேலருக்கு மாத்திரம் கொடுக்கப்பட்டிருந்தன) நம்பிக்கை இல்லாதவர்களும் இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாய் இருந்த புறஜாதிகளின் காலம் முடிந்ததை லாசருவின் மரணம் குறிக்கிறது. ஆனால் புறஜாதிகள் இப்பொழுதோ கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமாகி தேவனோடு ஒப்புரவானார்கள். (எபே. 2 : 12, 13) அவர்கள் தேவ தூதரால் (தேவனிடமிருந்து செய்தி கொண்டு செல்பவர்கள். இயேசுவும், அவருடைய அப்போஸ்தலரும், அவர்களின் காலத்திற்குப் பின்பு, தேவனுடைய ஆவியினாலே பேசினவர்களைத் தேவதூதர் குறித்துக்காட்டுகின்றனர்) பிதாவின் ஸ்தானத்தைக் குறிக்கும் ஆபிரகாமின் மடிக்குக் கொண்டுபோகப் பட்டார்கள். இவ்விதமாக அவர்கள் தேவனுடைய பிள்ளைகளாகி அவருடைய கிருபைக்குள் வந்தனர். இங்கே ஆபிரகாம் தேவனைக் குறித்துக் காட்டுகிறான். (ரோம. 4 : 11-17).

இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டு மறுஜாதிகளிடையே மறைந்து, புதைக்கப்பட்டது போன்ற ஒரு நிலைமையைக்காட்ட "மரணம், அடக்கம் பண்ணப்படல் முதலிய அறிகுறியான

அடையாளமான பதங்களோடு கூட "நரகத்தில் (ஒரு ஜாதியாக யூதர்கள் இறங்கிய மறதியின் நிலைமையில்) வேதனைப்படுகிற, போதுதன் கண்களை ஏறெடுத்து, ஆபிரகாமைத் தூரத்திலே கண்டு" என்று கூறினபொழுது வேறொரு உருவகத்தையும் நமது ஆண்டவர் சேர்த்துக் கூறுகிறார். பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் மரித்துப் போன மற்ற ஜாதிகளிடையே யூதர் சிதறடிக்கப்பட்ட நிலைமைக்குள்ளான பின்பு, இவ்விதமாக, மகா உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவிப்பார்களென்று கர்த்தர் காட்டுகிறார். வெகு தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் அவன் கண்டது என்பது, யூதர்கள் முன் போல தேவ தயவுள்ளவர்களாக இல்லை என்பதையும், கிறிஸ்துவின் மூலம் புறஜாதிகள் தேவ புத்திரராகி அவரிடம் சமீபமாய்க் கொண்டுவரப்பட்டிருப்பதையும் அவர்களைத் தேவன் அறிந்து கொண்டதையும் குறிக்கிறது.

ஐசுவரியவான் இரக்கத்திற்காகக் கெஞ்சி (பெயர்க் கிறிஸ்தவர்களிடமிருந்து யூதர் இரக்கத்தை எதிர்பார்த்தனர்) லாசரு தன் விரலின் நுனியை (எவ்வளவு அற்பமானாலும் ஓர் ஆறுதல் அளிக்கும் சேவையைத்) தண்ணீரில் தோய்த்து (தேவ வசனமாகிய தண்ணீர் யோவா. 5 : 3; எபே. 5 : 26) தனது நாக்கைக் குளிரப் பண்ண விரும்பினான். (தேவனிடமிருந்து ஓர் செய்தி கூறப்பட விரும்பினான்). தனது வேதனை குறையும்படி அவன் தனக்காக மன்றாடுவது, சுவிசேஷ யுகத்தின் அநேக நூற்றாண்டுகளில் யூதர்கள் அடைந்த உபத்திரவங்கள் சிலவற்றிலிருந்தாவது தங்களை விடுவிக்கும்படி வேண்டிக் கொண்டதைக் காட்டுகிறது. ஏனென்றால், சகல ஜாதிகளும், பெயர்க் கிறிஸ்தவர்களும் சேர்ந்து இரக்கமின்றி யூதரைத் துன்புறுத்தினர். அவர்களின் மகா உபத்திரவத்திலிருந்து தேவன் அவர்களை விடுவிப்பார் என்று அவர்கள் நம்புவதை அவர்களுடைய ஜெப புத்தகம் காட்டுகிறது.

ஐசுவரியவானுக்கு ஆபிரகாம் இரண்டு கருத்துள்ள ஒரு உத்தரவு கொடுத்தான். (வச. 25, 26) முதலாவது தேவன் யூதரை மகனே என்று அழைத்தது (ஏனென்றால் அவர்கள் உடன்படிக்கையின் பிள்ளைகள்) உடன்படிக்கையை மீறின தினாலுண்டான தண்டனையே அவர்கள் அனுபவிக்கும் துன்பங்கள் என்று அவர் கூறுவதைக் காட்டுகிறது. (லேவி. 26) இரண்டாவது சுவிசேஷ யுக சபைக்கும் யூதருக்கும் நடுவே கிறிஸ்துவினாலுண்டான வித்தியாசத்தின் காரணமாக ஒரு பெரும் பிளப்பு நிறுவப்பட்டு, ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்திற்கு எவரும் கடக்கக்கூடாதபடி இருந்தது என்று சொன்னார். ஏனென்றால், கிறிஸ்துவின் மூலம் வந்தாலொழிய எவரும் தேவனுடைய பிள்ளையாக முடியாது. கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாமல், சுவிசேஷத்தினாலுண்டான ஆறுதலை யூதருக்குக் கொடுத்து, சுவிசேஷ யுகத்திற்குரிய தேவ ஏற்பாட்டை தேவனுடைய உண்மையான பிள்ளைகள் எவரும் மீற மாட்டார்கள். இவ்விதமாக தேவனோ, அவரோடிருந்த லாசரு வகுப்பார் போன்றவரோ, யூதர்கள் இருந்த அந்த நிலைமையில் உபத்திரவத்திலிருந்து அவர்களை விடுவிக்க உதவி செய்ய முடியாது.

தாங்கள் உதவி பெறக் கூடாதபடியால், தங்கள் சகோதரருக்காவது உதவியனுப்பும்படி யூதர்கள் வேண்டிக் கொண்டார்கள். பாபிலோன் சிறையிருப்பிலிருந்து திரும்பிய, யூதா, பென்னியமீன் ஆகிய இரு கோத்திரங்களையும் உவமையின் ஐசுவரியவான் குறித்துக் காட்டுகிறான். எனவே அசீரியா சிறையிருப்பிலிருந்து திரும்பி வராத (திரும்பி வந்த வெகு சிலரைத் தவிர) சிதறடிக்கப்பட்ட மற்றப்பத்துக் கோத்திரங் களையும் ஐசுவரியவானின் ஐந்து சகோதரர்களும் குறித்துக் காட்டுகிறார்கள். "காணாமற்போன இஸ்ரவேலின் பத்துக் கோத்திரங்கள்" என்று இவர்களைப் பற்றி அடிக்கடி கூறப் படுகிறது. இப்பத்துக் கோத்திரங்களுக்கும் உதவி செய்வதற்கு யாரையாவது அனுப்பும்படி, சுவிசேஷ யுகத்திலே யூதர்கள் தேவனை நோக்கி ஜெபித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மோசேயும் தீர்க்கதரிசிகளும் இருக்கிறார்க ளென்றும், அவர்களுக்குச் செவி கொடுக்க வேண்டுமென்றும் ஆபிரகாம் சொன்னது முற்றிலும் உண்மையே. இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கு மட்டுமே மோசேயும் தீர்க்கதரிசிகளும் கொடுக்கப்பட்டிருந்தனர். ஆகையால் இங்கே சொல்லப்பட்டிருக்கிற ஐந்து சகோதரர்களும் வழக்கமாகச் சொல்லப்படுகிற "காணாமற் போன பத்துக் கோத்திரத்தாரையும்" குறித்துக் காட்டுகிறார்கள் என்பது தெளிவாய் இருக்கிறது.

ஆனால், யூதர்கள் தங்கள் வேண்டுகோளை வேறொரு உருவத்தில் மீண்டும் கூறினார்கள். "மரித்தோரிலிருந்து ஒருவன் எழுந்து வருவானானால்" அதாவது லாசரு வகுப்பார் உருவகமான பாவ மரணத்திலிருந்து எழுந்து வந்து (எபே. 2 : 1; கொலோ. 2 : 12, 13; 3 : 1) அவர்களுக்குச் சாட்சியாகச் சொல்வார்களானால் அவர்கள் நம்பக்கூடும். இஸ்ரவேலரின் பத்துக் கோத்திரங்களும், மற்ற இரண்டு கோத்திரங்களும் பெற்றிருந்த மோசேயையும் மற்றும் தீர்க்கதரிசிகளையும் அவர்கள் நம்பாவிட்டால் சுவிசேஷ யுகத்தில் தேவனுடைய பிள்ளைகளான கால முதல் உருவகமான மரணத்திலிருந்து எழுந்து வந்து, புறஜாதியான் ஒருவன் பிரசங்கித்தாலும், அவர்கள் மனந்திரும்ப மாட்டார்கள் என்று தேவன் பதிலளித்தார். இவ்விதமாக ஆபிரகாமின் இரண்டு கருத்துள்ள உத்தரவு தேவனுக்குப் பிரியமானதாய் இருந்ததால், தேவ ஏற்பாட்டிற்கும் இசைவாக இருந்தது. மேலும் விரிவான விளக்கத்திற்கு "ஜீவன், மரணம் – அதற்குப் பின்" என்ற *(Life, Death - Hereafter)* ஆங்கில புத்தகத்தை வாசிக்கவும்.

## ஹேடீஸிலிருந்து (Hades) ஐசுவரியவான் திரும்பவருவானா?

மற்ற உவமைகளைப் போலவே இந்த உவமையையும் சொல்லர்த்தமாக விளக்கக்கூடாது என்பதை நிரூபித்து, அறிகுறியான (symbolic) விளக்கத்தைக் கூறி, இயேசு ஏற்கனவே கூறின சத்தியங்களை முழுவதும் விளக்கி சந்தர்ப்பத்திற்கும் இசைவாக இருப்பதை நாம் கண்டு, இப்பொழுது வேறொரு கேள்விக்கு வருகிறோம். ஹேடீஸிலிருந்து ஐசுவரியவான் எப்பொழுதாவது திரும்புவானா? இதைப் பற்றிய சில வேத வாக்கியங்களை நாம் ஆராய விரும்புகிறோம். முதலாவது நாம் எரே. 16 : 14–16 வசனங்களைப் பார்ப்போம். இவ்வசனங்களின் கருத்தைத் தெளிவாய் அறிந்து கொள்ள கொஞ்சம் விளக்கம் தேவை. "எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை வரப் பண்ணின

கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு என்று எகிப்து தேசத்திலிருந்து இஸ்ரவேலரை விடுதலை செய்த தேவன் பேரில் இஸ்ரவேலர் ஆணையிடுவது வழக்கம் என்று நாம் அறிவோம். ஆனால் வருங்காலத்திலோவென்றால், "இஸ்ரவேல் புத்திரரை வட தேசத்திலிருந்தும் (ரஷியா) தாம் துரத்திவிட்ட எல்லா தேசங்களிலுமிருந்தும் (சுவிசேஷ யுகத்தில் இஸ்ரவேலர் சிதறடிக்கப்பட்டிருந்த ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய சகல நாடுகளிலுமிருந்து) வரப் பண்ணின கர்த்தரின் ஜீவனைக் கொண்டு சத்தியம் பண்ணுவார்கள்.

அவர்களை திரும்பவும் பரிசுத்த பூமிக்குக் கொண்டு வருவேன் என்று தேவன் வாக்களித்திருந்தார். இந்த தீர்க்கதரிசனம் நமது கண்களுக்கு முன்பாக நிறைவேறுவதை நாம் பார்க்கிறோம். தங்களுடைய சொந்த ராஜ்யத்தை அவர்கள் மீண்டும் பெற்று ஓர் சுதந்திர நாடாக ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள். "இதோ நான் மீன் பிடிக்கிற அநேகரை அழைத்தனுப்புவேன். இவர்கள் அவர்களைப் பிடிப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார். அடையாளமான மீன்களான இஸ்ரவேலரை அவர்களுடைய நாட்டிற்கு இழுப்பதற்கு "சீயோன் இயக்கம்" (Zionism) என்ற கவர்ச்சியான தூண்டிலைப் போட்டவர்களே மீன்பிடிக்கிறவர்கள் ஆவர். அதற்குப் பின்பு வேட்டைக்காரரான அநேகரை அனுப்புவேன். இவர்கள் அவர்களை எல்லா மலைகளிலும் (பெரிய இராஜ்யங்களிலும்) எல்லாக் குன்றுகளிலும் (குறைந்த அதிகாரமுள்ள ஏகாதிபத்தியங் களிலும்) கன்மலைகளின் வெடிப்புகளிலும் (சிதறடிக்கப்பட்ட சமயம் அவர்களுக்குப் பாதுகாப்பளித்த சகல ஸ்தாபனங்களிலும்) வேட்டையாடுவார்கள்.

இந்த வேட்டைக்காரர் (உ-ம்) ஜெர்மானியர், ஹிட்லர் மூலமாய், வேறெந்த ஜாதியும் ஒருபொழுதும் அனுபவித்திராத, கொடூர தண்டனையால் இவர்களைத் துன்புறுத்தினர். சுமார் 60 லட்சம் பேர் மிகவும் நெருக்கடியான தற்காலிகச் சிறையில் அடைத்து வைக்கப்பட்டு பயங்கரமாய்க் கொடுமைப் படுத்தப்பட்டனர். அவர்களில் அநேகர் நச்சுப் புகையால் கொல்லப்பட்டனர் என்றாலும் ஜெர்மானியர் மட்டும் யூதரைக் கொடுமைப்படுத்தினர் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. ரஷியாவில் கி.பி. 1881-ம் வருஷம் ஆரம்பித்து பின்பு ருமேனியா, ஆஸ்திரியா, போலந்து முதலிய நாடுகளும் ஒன்றன்பின் ஒன்றாக யூதரை நிர்மூலமாக்கும் நோக்கமாய் அவர்களைத் துன்புறுத்தினர். வேட்டைக்காரரால் இரைக்காக விரட்டப்பட்டுச் சகாயஞ் செய்வாரின்றி, நம்பிக்கையிழந்து, துரத்துண்டு ஓடுகிற மான்போன்று யூதர் துன்புறுத்தப்பட்டனர். இஸ்ரவேலர் சுயதேசம் திரும்புவதற்கு தேவ தயவு ஆரம்பித்ததும், தேவ ஏற்பாட்டிற்கு இசைய இவையனைத்தும் நடந்திருக்கின்றன.

எசே. 36 : 24-38-ம் வசனங்கள் யூதரை அடையாளமாகக் காட்டும் ஐசுவரியவான் ஹேட்ஸ் நிலையிலிருந்து (ஒரு ஜாதியாக மறக்கப்பட்ட நிலைமை யிலிருந்து) திரும்பி வருவானென்பதைக் காட்டுகின்றன. இவர்கள் சுயதேசம் திரும்புகிற இக்காலத்தை மட்டும் இவ்வசனங்கள் குறிக்காமல், ஆயிர வருட ஆட்சியில் அவர்கள் இருக்கும் நிலைமையையும் மிகவும் விசேஷித்துக் காட்டுகிறது. எசே. 37 : 21-25 வசனங்கள் மாம்ச இஸ்ரவேலர் தேவனுடைய பரிபூரண தயவை, கிருபையைப், பெறுவார்கள் என்பதைத் தெரிவிக்கின்றன. இச்செய்தியை யுக முடிவில் இஸ்ரவேலுக்குக் கொடுக்கும்படி அவர் தம்முடைய சுவிசேஷ யுக ஜனங்களுக்குக் கட்டளையிட்டார். ஆயிர வருட யுகத்தில் இந்த வசனங்கள் நிறைவேறும். ஏனென்றால், அக்காலத்திலே கிறிஸ்துவும் அவருடைய சபையுமாகிய நிறைவேறுதலான தாவீதின் கீழ் அவர்கள் ஒரே இராஜ்யமாகத் திரும்பவும் ஐக்கியப்படுவார்கள். மேலும், ஆமோஸ் 9 : 14, 15 வசனங்களும் ஒரு ஜாதியாகச் சிதறடிக்கப்பட்ட நிலைமையான ஹேட்ஸிலிருந்து (Hades) இஸ்ரவேலர் திரும்பி, தேவனுடைய விசேஷ தயவில் மறுபடியும் களிகூர்ந்து, அவர்களுடைய தேசத்தில் குடியிருப்பார்கள் என மிகவும் தெளிவாய் நிரூபிக்கின்றன. ஆயிர வருட ஆட்சி யுகத்தில், அவர் தாவீதின் கூடாரத்தை மறுபடியும் எழுப்பின பின்பு, அதனுடைய பரிபூரண நிறைவேறுதல் சம்பவிக்கும் (வச. 11; அப். 15 : 17)

லூக். 2 : 34 வசனத்தையும் கவனியுங்கள். பின்னும் சிமியோன் அவர்களை (யோசேப்பையும் மரியாளையும்) ஆசீர்வதித்து அவருடைய - இயேசுவுடைய தாயாகிய மரியாளை நோக்கி, "..... இஸ்ரவேலில் அநேகர் விழுகிறதற்கும், எழுந்திருக்கிறதற்கும், இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்"என்று சொன்னான்.

இங்கே சிமியோன் நமது கர்த்தராகிய இயேசுவைப் பற்றி மரியாளுக்கு ஒரு தீர்க்கதரிசனத்தைக் கூறும்பொழுது, இஸ்ரவேலர் இடறுவதற்கு அவர் ஒரு தருணமாயும், அதனால் அநேகர் விழுவார்களென்றும், ஆனால் ஆயிர வருட யுகத்தில் அவர்களின் இரட்சகரும் கர்த்தருமாகிய அவரால் மறுபடியும் எழுப்பப்பட்டு, ஆயிர வருட யுகத்தின் பூமியை அவர்களின் வாசஸ்தலமாகக் கொடுப்பார் என்றும் கூறினான். சுவிசேஷ யுகம் முழுவதும் யூதரால் விரோதமாய்ப் பேசப்பட்ட ஓர் அடையாளமாக அவர் இருந்தார். ஏனென்றால், அவர்கள் அவரை விரும்புவதற்கான ஒரு அழகும் அவருக்கு இல்லாததால் அவரைத் தள்ளிவிட்டனர்.

எசே. 16 : 46-63-ம் ஐசுவரியவான் (யூத ஜாதி) நரகத்தில் தரித்திருக்க மாட்டான் எனக் காட்டுகிறது. சோதோமையும் சமாரியாவையும் இஸ்ரவேலின் சகோதரிகளாக ஒப்பிட்டு அவர்களைப் பார்க்கிலும் இஸ்ரவேலர் மிகவும் கேடாய் நடந்ததாகவும் கூறப்படுகிறது. (வச. 46-52). ஏனென்றால் அவள், தான் பெற்ற பெரிய வெளிச்சத்திற்கு விரோதமாய்ப் பாவஞ் செய்தாள். மூத்த சகோதரியாகிய சமாரியாவும் அவள் குமாரத்திகளும் முறையே பத்துக் கோத்திரத்தாரின் வட இராஜ்யத்தையும், அதற்குட்பட்டவர்களையும் குறித்துக் காட்டுகிறது. இஸ்ரவேலின் ராஜாவாகிய ஓம்ரியின் காலத்தில் சமாரியாப் பட்டணம் வட இராஜ்யத்தின் தலைநகராக இருந்ததால் அதன் பெயரே முழு இராஜ்யத்திற்கும் பெயராயிற்று. சோதோமும் அவள் குமாரத்திகளும், லோத்தின் நாட்களில் அழிக்கப்பட்ட ஜாதியையும் அதற்குக் கப்பம் கொடுத்த மற்றவரையும் காட்டுகின்றன.

மேலும், தேவன், "நான் சோதோமும், அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற அவர்களின் சிறையிருப்பையும் சமாரியாவும் அவள் குமாரத்திகளும் சிறையிருக்கிற

சிறையிருப்பையும், அவர்கள் நடுவிலே நீ சிறையிருக்கிற உன் சிறையிருப்பையும் திருப்புவேன்," என்று தொடர்ந்து கூறுகிறார். (இங்கே கூறப்பட்டிருக்கும் சிறையிருப்பு, அவர்களின் மரண நிலைமையான சிறையிருப்பு. ஏனென்றால், அவர்கள் அப்பொழுது மரித்திருந்தார்கள். கல்லறையின் கதவுகளைத் திறந்து இந்த கைதிகளை விடுவிக்க கிறிஸ்து வருகிறார். (ஏசா. 61 : 1; சகரி. 9 : 11).

அதனாலே, நீ அவர்களுக்கு ஆறுதலாய் இருந்து, உன் இலச்சையைச் சுமந்து, நீ செய்த எல்லாவற்றினாலும் வெட்கமடைவாய். இரண்டு கோத்திர இராஜ்யம் தனது பெரும் பாதகங்களினால் மற்றவர்களுக்கு ஆறுதலாயிருந்து, தனது மாதிரியினால் மற்றவர்களின் பாவச் செயலில் அவர்களுக்கு ஊக்கம் அளித்தனர். இப்பாவங்களைத் தேவன் நிச்சயமாய்க் கண்டித்தார். "உன் சகோதரிகளாகிய சோதோமும், அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள். சமாரியாவும் அவள் குமாரத்திகளும் தங்கள் முந்தின சீருக்குத் திரும்புவார்கள். அப்பொழுது நீயும் உன் குமாரத்திகளும் உங்கள் முந்தின சீருக்குத் திரும்புவீர்கள். (எல்லாரும் ஆதாமுக்குள் இழந்து போனதைத் திரும்பப் பெறுவார்கள்). அதாவது பாவஞ் செய்யுமுன் ஆதாமும் ஏவாளும் அனுபவித்த ஏதேன் பரதீஸ் நிலைமைகளும், பூரண ஜீவனும், இயேசுவின் மீட்கும்பொருள் பலியினால் கிடைப்பதாய் இருக்கிறது. உன்னை வெறுக்கும் சீரியாவின் குமாரத்திகளும் அவமானம் பண்ணினபோது உன் பொல்லாப்பு வெளியாயிற்றே. அதற்கு முன் உன் கர்வத்தின் நாளிலே, உன் சகோதரியாகிய சோதோமின் பெயரை உன் வாயினாலும் உச்சரிக்கமாட்டாய். உன் முறைகேட்டையும், உன் அருவருப்புகளையும் நீ சுமப்பாயென்று கர்த்தர் சொல்லுகிறார். (ஆகையால் தேவன் தமது நீதியின் பிரகாரம் அவர்களுக்கு வர வேண்டிய தண்டனையை அவர்களுக்கு அனுப்பினார்).

கர்த்தராகிய தேவன் கூறுவதாவது:- "நீங்கள் செய்தது போல நானும் உங்களுக்குச் செய்வேன். உடன்படிக்கையை மீறினதினால் நீங்கள் செய்த ஆணையை அவமதித்தீர்கள். (சீனாய் மலையில் அவர்கள் செய்த ஆணையை அவமதித்தனர்) என்ற போதிலும் உன்னுடைய இளம் பிராயத்தில் நான் உன்னோடு பண்ணின உடன்படிக்கையை நினைவுகூர்ந்து உன்னோடு ஒரு நித்திய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன். (அவர்கள் கீழ்ப்படிந்திருந்தால் (யாத். 19 : 5, 6) இராஜரீக ஆசாரியக் கூட்டமாக்குவேன் என்று அவர்களுக்கு நிச்சயப் படுத்தினபொழுது அவர்களோடு செய்த உடன் படிக்கையை அவர்கள் மீறின போதிலும் தாம் அதை மறக்கவில்லை என்று தேவன் கூறுகிறார்). உன்னுடைய சகோதரிகளை, மூத்த சகோதரிகளையும், இளைய சகோதரிகளையும், நீ ஏற்றுக்கொள்ளும் போது, உன் வழிகளை நினைவு கூர்ந்து வெட்கப்படுவாய். நான் அவர்களை உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன். (ஆதாமுக்குள் இழந்து போனவற்றைத் திரும்பப்பெறும் ஆசீர்வாதங்களுக்காக, ஆபிரகாமின்மாம்ச சந்ததியான இஸ்ரவேலரிடம் அவர்கள் வருவார்கள்.) ஆனால் உன்னுடைய உடன்படிக்கையின் படியல்ல (நியாயப்பிரமாண உடன்படிக்கையின்படியல்ல) ஆனால், என்னுடைய உடன் படிக்கையை நான் உன்னோடு ஏற்படுத்துவேன். நானே கர்த்தர்" என்று நீ அறிந்து கொள்வாய்.

தீர்க்கத்தரிசனங்களின்படி, மாம்ச இஸ்ரவேலர் தங்கள் முழு இருதயத்தோடும் அவரிடம் திரும்பும்பொழுது – திரும்புவது நிச்சயம் – அந்த உடன்படிக்கையை தேவன் அவர்களுடன் ஏற்படுத்துவார். அவர் என்றென்றைக்கும் அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்கள் செய்த எல்லா அக்கிரமங்களையும் அவர் மன்னித்தருளும்போது, அவர்கள் அவரை அறிந்து, நினைவு கூர்ந்து, பிரமித்து நாணத்தினால் தங்கள் வாயை இனித் திறக்கமாட்டாதபடி அவர் அந்த உடன்படிக்கையை ஏற்படுத்து வார். இது ஆபிரகாமுடன் செய்த உடன்படிக்கையினால் வானத்திற்குரியதும், பூமிக்குரியதுமான அம்சங்களுடைய இரண்டு சந்ததிகளுக்கும் உரிய ஆசீர்வாதங்களாகும். சோதோம் மாத்திரமல்ல, சம பூமியின் மற்றப் பட்டணங்களோடுங்கூடக் கொடிய அக்கிரமங்களைச் செய்திருந்த பத்துக் கோத்திர இராஜ்யத்திற்காகவும் இயேசுவும் திருச்சபையும் செய்யும் மாட்சிமை நிறைந்த கிரியைகளினாலும் இவை நடந்தேறும். அவர்கள் அனைவர் மேலும் இரக்கம் வைத்து, அவர்களை ஆசீர்வதிப்பார். இவ்விதமாக நமது பரம பிதா அவர்களுக்கு நன்மையானதைக் கொடுத்து கிறிஸ்துவின் புண்ணியம் அவர்களுக்குப் பலிதமாகும்போது – அனுபவிக்கும் பொழுது – தேவன் தம்மையும், கிறிஸ்துவையும் மகிமைப்படுத்துவார்.

மேலே கூறப்பட்ட வசனங்கள் இஸ்ரவேல் ஜாதியார் தேவதயவுக்கும் தங்கள் சுய தேசத்திற்கும் மறுபடியும் திரும்புவார்கள் என்பதைத் திட்டவட்டமான ஒரு முடிவாக நிரூபிக்கின்றன. (இது சம்பந்தமாக மேலும் அநேக வேத வசனங்களைக் கூறலாம். (உ–ம்) ரோம. 11 ஆம் அதிகாரம் இவ்விதமாக உவமையின் அடையாளமான ஐசுவரியவான், தேவன் குறித்த காலத்தில், ஹேட்ஸிலிருந்து (hades) திரும்புவான். உருவக விளக்கத்தின்படி இந்த உவமையைப் போதிக்கும் பொழுது, யூதரையும் புறஜாதிகளையும் தேவன் நடத்தின விதத்தை, நாம் ஆச்சரியப்படத்தக்கதான ஒரு படம் போல அது சித்தரித்துக் காட்டுகிறது. நமது பரமபிதா, மனுமக்களுக்குப் பாராட்டியிருக்கிற பட்சம் நிறைந்த மாபெரும் அன்புக்காக நமது கரங்களைக் குவித்து, தலைகளை உயர்த்தி அவருக்கு நன்றி செலுத்துவோமாக. – ஆமென். ***


***For English Magazines, Volumes & Translated Tamil Magazines Contact :***

**Laymen's Home Missionary Movement**

32 D, Dr.Solomon Compound, Near Railway Gate, Nazareth - 628 617
Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincent@biblestandardindia.com


**FOR PRIVATE CIRCULATION ONLY**